
# ஆரம்பக்கல்வி

# ELEMENTARY EDUCATION

DECEMBER—1955



எய்டட் பள்ளி மானேஜர்கள் மாநாட்டின்
வரவேற்புக் கமிட்டித் தலைவர்
திரு எஸ். ராமாநுஜய்யா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 DEC 1955
MADRAS
1444

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

# ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94/95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

## "ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது **"புதுமுறை சங்க வாசகங்களை"** அல்லது **"வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை"** பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50—க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, **"ஆரம்பக்கல்வி"** மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M.O. மூலம் அனுப்பவும்.

### புதுமுறை சங்க வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 4 0 | 8 | 4–5–'55 |
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 22 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 7 0 | 23 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 8 0 | 23 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 23 | 19–5–'54 |

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1–0–0 அனுப்பவும்.

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர்: பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 16 | டிசம்பர் 1955 | இதழ் 12


# பெற்றோம் வெற்றி!
# பெறுவோம் வெற்றி!!

இது ஜனநாயக சகாப்தம். இந்த சகாப்தத்தில் கிளர்ச்சி செய்பவர்கள்தான் வெற்றி பெறுவர். பொதுக் கூட்டங்கள் போட்டு, ஊர்வலங்கள் நடத்தி, மாநாடுகள் கூட்டுபவர்கள்தான் கோரிக்கைகள் நிறைவேறப் பெறுவர். உரத்த குரலில் உரிமை முழக்கத்தை எழுப்புபவர்கள்தான் அரசாங்கத்தின் கவனத்தைத் தங்கள்பால் இழுக்க முடியும்.

ஒரு கோரிக்கை அல்லது வேண்டுகோள் அல்லது இலட்சியம் எவ்வளவுதான் நியாயமானதாக இருந்தாலும், அது நியாயமானது என்ற காரணத்தால் மட்டுமே வெற்றி பெற்றுவிடாது. நியாயத்தின் பின்னால் போதுமான ஆதரவும் பலமும் ஆர்வமும் எழுச்சியும் திரண்டெழுந்தால் மட்டுமே வெற்றி உறுதி.

அழுத பிள்ளை மட்டுமே பால் குடிக்கும் என்பது பழங்கால வாக்கியம். கிளர்ச்சி செய்பவர்கள் மட்டுமே பலன் பெறுவர் என்பது ஜனநாயக காலப் பொன் மொழி.

இந்த உண்மையை நாம் வாய்ப்புக் கிடைத்த நேரத்திலெல்லாம் வற்புறுத்திக் கூறி வந்திருக்கிறோம். நம்முடைய வற்புறுத்தல் எவ்வளவு நியாயமானது என்பதை அண்மையில் நடைபெற்ற நம்முடைய மாநில மாநாடும், மாநாட்டிற்குப் பிறகு வெளி வந்த அரசாங்க உத்தரவும் தெளிவாக்கி விட்டன.

அரசாங்கத்தின் மே மாத உத்தரவுப்படி இலவசக் கல்வியைப் பெறுகிற எல்லா மாணவர்களுக்கும் முழு அளவு நஷ்ட ஈட்டைத் தரவேண்டுமே தவிர, அரசாங்கம் அறிவித்துள்ள குறைந்த அளவு நஷ்ட ஈட்டால் பயனில்லை என்று மாநில மாநாடு அழுத்தந்திருத்தமாக அறிவித்தது.

குறைந்த அளவு நஷ்ட ஈடுதான் தரப்படுமானால் பள்ளிக் கூடங்களை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைப் பல மானேஜர்கள் தெள்ளத் தெளிவாக விளக்கிப் பேசினார்கள்.

நம் மாநில மாநாடு நவம்பர் மாதம் 19 ம் நாள் நடைபெற்றது.

நவம்பர் 23, மாதம் முடிவதற்குள்ளாகவே சென்னை அரசாங்கம் நஷ்ட ஈடுபற்றிப் புதியதோர் உத்தரவைப் பிறப்பித்தது.

செப்டம்பர் மாதம் 13 ம் தேதி வரையில் எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் முழு அளவு நஷ்ட ஈடு தரப்படும் என்று இந்த உத்தரவு அறிவிக்கிறது.

**மாநில மாநாட்டால் நமக்குக்கிடைத்த முதல் வெற்றி இது.**

மாநில மாநாட்டிற்கு முன்னரேயும் இதே கோரிக்கையை நாம் பலமுறை எழுப்பியிருக்கிறோம்.

நம்முடைய கோரிக்கை மிகவும் நியாயமானது.

நியாய உணர்ச்சி படைத்த அத்தனைப் பேரும் நிச்சயம் ஒப்புக் கொள்ள வேண்டியது.

என்றாலும் அரசாங்கத்தார், மாநில மாநாட்டைக் கூட்டுவதற்கு முன்னாள் வரையில் நம்முடைய கோரிக்கையில் பொதிந்துள்ள நியாயத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

மிகப் பெரிய அளவில் மாநில மாநாடு ஒன்றைக் கூட்டி, மாநிலம் எங்கணும் உள்ள மானேஜர்களை ஒன்று திரட்டி, நம்முடைய உரிமைக் குரலை நல்லதோர் முறையில் எழுப்பிக் காட்டிய

பிறகுதான்—கிளர்ச்சிப் பாதையில் துணிச்சலோடு இறங்கியதற்கு அப்புறம்தான்—எல்லாத் தினசரிகளிலும் மாநாட்டுச் செய்திகள் திட்டவட்டமாக வெளியானதற்குப் பின்னால்தான், இதுவரை நம். கோரிக்கையைப் பற்றி ஏனோதானோ என்று இருந்த அரசாங்கம் நிமிர்ந்து உட்கார்ந்து நம் பிரச்சினையை அலசிப் பார்த்திருக்கிறது. பார்த்ததன் விளைவாகப் புதியதோர் உத்தரவை உடனடியாக வெளியிட்டிருக்கிறது.

எனவேதான், புதிய உத்தரவை, மாநாட்டால் விளைந்த முதல் வெற்றி என்று கூறுகிறோம்.

முதல் வெற்றி என்று கூறுகிறோமே தவிர முழு வெற்றி என்று கூறவில்லை. ஏனென்றால், செப்டம்பர் மாதம் 13 ம் தேதி வரையில் முழு நஷ்ட ஈடு தரப்படும் என்று தெரிவிக்கிற இந்த உத்தரவு, அதற்குப் பிந்தி உள்ள காலத்திற்கு, கல்வி இலாகா அறிவித்துள்ள குறைந்த அளவு நஷ்ட ஈடுதான் தரப்படும் என்று அறிவித்திருக்கிறது.

விரைவில் அரசாங்கம் இந்தத் தவறையும் திருத்திக் கொள்ளும் என்று நம்புகிறோம். செப்டம்பர் 13 வரையில் தரப்படுவது போலவே எல்லா மாதங்களுக்கும் இனியும் முழு நஷ்ட ஈடு தரப்பட வேண்டும்.

திருப்படி செய்தாக வேண்டும் நாம்.

எம். எல். ஏக்களையெல்லாம் பேட்டிகண்டு, நம்முடைய கோரிக்கையை விளக்கிச் சொல்லி, சட்ட சபையில் நம் பிரச்சினையை எழுப்பும்படி கேட்கவேண்டும்.

ஆங்காங்குள்ள மானேஜர்கள் கூட்டங்கள் போட்டு, செப்டம்பர் 13 வரையில் முழு நஷ்ட ஈடு தந்ததற்காக அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தும், எல்லாக் காலத்திற்கும் அது போலவே முழு நஷ்ட ஈடு தரவேண்டும் என்று வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும்.

எல்லா ஊர்களிலிருந்தும் இத்தகு தீர்மானங்கள் உடனடியாக அரசாங்கத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

முதல் வெற்றி பெற்றிருக்கிறோம். இது போதாது முழு வெற்றி பெற்றாக வேண்டும். எல்லாக் காலத்திற்கும் முழு அளவு நஷ்ட ஈட்டை அடைந்தாக வேண்டும்.

"19–5–55 க்கு முன்னாலிருந்து பணியாற்றிவரும் பள்ளிகளுக்கு கடந்த மூன்றாண்டுகளில் அவை வசூலித்து வந்த பள்ளிக் கட்டணங்களின் சராசரியைக் கணக்கிட்டு அந்த சராசரி கட்டண

விகிதத்தின்படி நஷ்ட ஈடு அளிக்கப்படவேண்டும். 19-5-55 க்குப் பிறகு தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு அவை தொடங்கப்பட்ட வட்டாரத்தில் ஏற்கெனவே உள்ள பழைய பள்ளிகளுக்குத் தரப் படுகிற நஷ்ட ஈட்டின் சராசரியைக் கணக்கிட்டு அதன்படி நஷ்ட ஈட்டை அளிக்கவேண்டுமென இம்மாநாடு கோருகிறது."

இது, நஷ்ட ஈட்டைப் பற்றி, மாநில மாநாடு நிறைவேற்றியுள்ள தீர்மானம்.

இந்தத் தீர்மானம் நேர்மையும் நீதியும் நிறைந்தது. அரசாங் கத்தாரால் நிச்சயம் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய தகுதியும் தன் மையும் படைத்தது.

அரசாங்கம், நீதியின் குரலுக்கு—நேர்மையின் வேண்டு கோளுக்கு நிச்சயம் செவிசாய்க்கும் என்று நம்புகிறோம்.

"பல்லாயிரக் கணக்கான புதிய பள்ளிக்கூடங்களை நிறுவ வேண்டியது ஜனநாய அரசாங்கத்தின் கடமையாயிருப்பதால், கல்வி பரப்புவதில் அரும்பணியாற்றிய தனிப்பட்ட நபர்களைக் கொண்டு மேலும் பல பள்ளிகள் ஏற்படுத்தி கல்வித் துறையில் நாடு முன் னேற வழி செய்யவேண்டுமென்று இம்மாநாடு வேண்டிக் கொள் கிறது"

இது, மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றோர் தீர்மானம்.

அழகப்பா குழுவின் அறிக்கையின்படி சென்னை ராஜ்யத்தில் பள்ளி செல்லும் வயதுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை 63 லட்சம்.

இவர்களில் இப்போது பள்ளி செல்பவர்களின் எண்ணிக்கை 32 லட்சம்.

பள்ளிக்கூடத்தில் இன்னமும் சேராமல் இருப்பவர்களின் தொகை 31 லட்சம்.

இந்த 31 லட்சம் பேருக்கும் தேவைப்படுகிற புதிய பள்ளிக் கூடங்கள் விரைவில் நிறுவப்பட வேண்டும்.

இத்தனைப் பள்ளிக்கூடங்களையும் அரசாங்கத்தார் தங்களுடைய சொந்தச் செலவிலேயே நிறுவுவது என்பது நடவாத காரியம்.

அதற்குத் தேவையான அளவு பண வசதி அரசாங்கத்திடம் இல்லை என்பது நாடறிந்த இரகசியம்.

எல்லாப் பள்ளிக்கூடங்களையும் ஜில்லா போர்டுகள் அல்லது முனிசிபாலிடிகளே நடத்துவதென்பதும் இயலாத செயல். அதற்கு

வேண்டிய அளவு பொருள் வளம் அந்த நிறுவனங்களிடமும் கிடையாது.

எனவே இந்தத் துறையில் பழுத்த அநுபவமும், நிறைந்த ஆற்றலும், சிறந்த ஆர்வமும் படைத்த தனிப்பட்ட தோழர்களை இந்தச் செயலுக்காகப் பயன்படுத்திக் கொள்வதே சாலச் சிறப்புடைய செயலாகும்.

தனிப்பட்டவர்தம் பள்ளிகளின் அருமையையும் பெருமையையும் பாராட்டிக் கூறாத கல்வித்துறை வல்லுநர்களே கிடையாது.

நகர சபைப் பள்ளிக்கூடங்கள் ஏராளமாக இருந்தும் கூட, அந்தப் பள்ளிக்கூடங்களில் கல்வி இலவசமாக அளிக்கப்பட்டும்கூட, பல பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைத் தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்குத்தான் அனுப்புகின்றனர். நகரசபைப் பள்ளிகளில் கட்டணம் இல்லை. தனிப்பட்டோர் பள்ளிகளில் கட்டணம் உண்டு. என்றாலும் பிள்ளைகளை அங்கே அனுப்பாமல் இங்கே அனுப்புவதற்குக் காரணம், அளிக்கப்படுகிற கல்வியின் தரம் அங்கே குறைவு, இங்கே கூடுதல் என்பதைத் தவிர வேறென்ன?

சென்னைத் தினசரி "சுதேசமித்திரன்" எடுத்துக் காட்டியிருப்பதைப் போல, சிறிதளவு கூட பண வசதி இல்லாதவர்கள் தான், தங்கள் பிள்ளைகளை, நகரசபைப் பள்ளிகளுக்கு அனுப்பி வருகின்றனர். பண வசதி இல்லாதிருந்தவர்களுக்கு ஓரளவு பண வசதி ஏற்பட்டாலும் போதும், உடனே தங்கள் பிள்ளைகளைத் தனிப்பட்டோர் பள்ளிகளுக்கு மாற்றிவிடுகின்றனர் என்று "சுதேசமித்திரன்" இயம்பியிருப்பது உண்மையிலும் உண்மையாகும்.

கடந்த காலத்தில் இந்த அளவுக்குப் பூரிப்பும் பெருமையும் தரத்தக்க முறையில் தங்கள் பள்ளிக்கூடங்களை நடத்தி வந்த தனிப்பட்டவர்களிடமே, புதிய பள்ளிகளை நிறுவும் பொறுப்பையும் ஒப்படைப்பதுதான் அறிவுடைமை,

"எல்லாப் பிள்ளைகளும் கல்விக்கூடத்தில்" என்கிற எழில் மிகு நிலைமை ஏற்படவேண்டுமானால் தனிப்பட்டவர்தம் தொண்டு, அதன் முழு அளவிலும் பயன்படுத்தப்படவேண்டும். எனவே தான் மாநில மாநாடு, தனிப்பட்டவர்தம் பள்ளிகளை மேலும் நிறுவ அரசாங்கத்தார் ஆக்கமும் ஊக்கமும் அளித்திடல்வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

"குறிப்பிட்ட காலத்திற்குள் தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு குழு அமைக்கப்பட்டுப் பதிவு செய்யப்படல் வேண்டுமென்று அழகப்பா குழுவின் அறிக்கை கூறுவது உள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய செயல் என்றும்,

அதனால் பள்ளியின் நலன் சரிவரப் பாதுகாக்கப்படமாட்டாதென்றும், அதற்கு மாறாகக் குழப்பமும் கலகமும் பூசல்களும்தான் வளருமென்றும் இம்மாநாடு எடுத்துக் காட்ட விரும்புகிறது."

இது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றோர் சிறந்த தீர்மானம்.

இப்படிப்பட்ட பல அருமையான தீர்மானங்களை மாநில மாநாடு நிறைவேற்றியிருக்கிறது. அவை அனைத்தையும் மானேஜர்கள் கருத்தூன்றிக் கவனித்து, எம். எல். ஏக்கள், எம். எல். சிக்கள், முதலியவர்களுக்கெல்லாம் விளக்கிக் கூறி, அந்தத் தீர்மானங்கள் நடைமுறைக் கிரமமாக மாறும்படி செய்யவேண்டும்.

மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற மிக அரிய பணியாற்றிய வேலூர் நண்பர்களை மனமாரப் பாராட்டுகிறோம். அவர்களுடைய உணர்ச்சி மிக்க ஓயாத உழைப்பும் சலியாத ஆர்வமும் இல்லாம லிருந்தால் மாநாட்டைக் கூட்டியே இருக்க முடியாது.

மிகக் குறுகிய கால முன்னறிவிப்பே கொடுக்கப்பட்டிருந்தும், மாநில மாநாட்டிற்குப் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், மானேஜர்கள் திரள் திரளாகத் திரண்டு வந்தது குறித்தும், வந்து நடவடிக்கையில் ஆர்வத்தோடு ஈடுபட்டது குறித்தும் மிக மிக மகிழ்கிறோம்.

செந்தமிழ் நாட்டின் முதுபெருந் தலைவர் டாக்டர் வரதராசலு அவர்கள், தம்முடைய தள்ளாத வயதையும் நெருக்கடியான வேலைகளையும் பொருட்படுத்தாமல், நம்முடைய அழைப்பை மனமுவந்து ஏற்று, மாநாட்டுக்குத் தலைமை தாங்கி அதனை எழிலும் இனிமையும் மிகுந்த முறையில் நடத்திக் கொடுத்த பெருந்தகைமையை—அன்பை—கண்ணியத்தை நாம் என்றென்றும் மறக்க முடியாது.

நம் நாடு, தினத்தந்தி, தினமணி, சுதேசமித்திரன் ஆகிய தினசரிகள் நம் மாநாட்டுச் செய்திகளை விளக்கமாகவும் விரிவாகவும் வெளியிட்டுப் பேருதவி புரிந்தன. அந்த ஏடுகளுடைய இந்த நல்லுதவி இல்லாமலிருந்தால் மாநாடு பற்றிய செய்திகளைப் பொதுமக்கள் இத்துணை விளக்கமாகவும் தெளிவாகவும் அறிந்துகொண்டிருக்க முடியாது. என்வே அந்த ஏடுகளின் ஆசிரியர்களுக்கும் நம்முடைய நன்றி உரியதாகுக.

மாநாடு முடிந்தது—முதல் வெற்றி கிடைத்தது.

முழு வெற்றியும் கிடைத்தாக வேண்டும். மானேஜர்களே—திரண்டெழுங்கள், அமைதியான முறையில் கிளர்ச்சி செய்யுங்கள், வெற்றி உறுதி.

பெற்றோம் வெற்றி! பெறுவோம் வெற்றி !!

# மாநில மாநாடு! மட்டற்ற ஆர்வம்!

## வேலூர் நகரில் உரிமை முழக்கம்

19–11–55! அந்தத் தேதியை, சென்னை மாநில உதவி பெறும் மானேஜர்களும் ஆசிரிய மானேஜர்களும் எப்படி மறக்க முடியும்? அந்தத் தேதி—அந்தத் தேதியில் நடைபெற்ற அவர்களுடைய மாநில மாநாடு—அந்த மாநாட்டில் டாக்டர் வரதராசலு நாயுடு ஆற்றிய வீரவுரை—மாநாட்டின் விளைவாக மாநாட்டிற்குப் பிறகு அரசாங்கத்தார் பிறப்பித்த புதிய உத்தரவு—இத்தனையையும் எப்படி அவர்கள் மறக்க முடியும்?

சென்னை மாநில மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்களின் இரண்டாவது மாநாடு, 19–11–55 அன்று வேலூர் நகர மண்டபத்தில் சீரும் சிறப்பும் செறிந்த வகையில் நடைபெற்றது.

மாநிலம் எங்கணுமிருந்து, மானேஜர்கள், அன்பழைப்பைப் பெற்று ஓடோடி வந்திருந்தனர்.

திருவாளர் எஸ். இராமானுஜையா அவர்கள், முதலில், மாநாட்டுத் தலைவரையும், பிரதிநிதிகளையும், மற்றையோரையும் வரவேற்று, விரிவானதோர் சொற்பொழிவாற்றினர்.

திருவாளர் பஞ்சாட்சரம் செட்டியார் எம். எல். ஏ. அவர்கள், மாநாட்டைத் திறந்து வைத்து நல்லதோர் உரையாற்றினர்கள். தனிப்பட்டவர் தம் பள்ளிகளில்தான் கல்வியின்தரம் உயர்வாகக் காணப்படுகிறது என்றும், எதிர்கால மக்களின் முன்னேற்றம் ஆசிரியர்களிடமும் பள்ளிக்கூட நிர்வாகிகளிடமும் தான் இருக்கிறது என்றும், எனவே அரசாங்கத்தார் அவர்கள் இரு சாரானுடைய கோரிக்கைகளையும் அனுதாபத்தோடு கவனித்து அக்கறையோடு பணி புரிவது இன்றியமையாதது என்றும் அவர் வற்புறுத்திக் கூறினர். கல்வி நிறுவனங்களின் நடைமுறையில், ஆட்சிப் பீடத்தவர்கள், அடிக்கடி குறுக்கிடுவது முறையுமல்ல—அதனுல் கல்வியின் வளர்ச்சியும் சிறப்பாக அமையாது என்பதையும் திருவாளர் செட்டியார் அவர்கள் தெளிவாக விளக்கினர்கள்.

தியாகத்தின் சிகரம் டாக்டர் வரதராசலு அவர்கள் மாநாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று வீரமுழக்கம் புரிந்தார்கள். அந்த அறிவுச் செம்மலின் உடலில்தான் சிறிதளவு தளர்ச்சி காணப்

படுகிறதே தவிர, உள்ளத்திலேயும் உள்ளத்திலிருந்து உருண்டோடி வந்த சொற்களிலேயும் இளமையின் துடிப்பும் வீரத்தின் ஆர்வமும் தான் கொந்தளித்துக்கொண்டிருந்தன. அஞ்சாத நெஞ்சு படைத்த அந்த அடலேறு அன்றந்த மாநாட்டில் ஆற்றிய விளக்கவுரையின் ஒவ்வோர் வாசகத்திலேயும் முதிர்ந்த அனுபவத்தின் முத்திரையும், உயர்ந்த பண்பாட்டின் அடையாளமும், சீர்திருத்த உள்ளத்தின் சிந்தனையும் சிறந்த முறையில் பதிந்து கிடந்தன.

ராவ் சாகிப். சி. துரைசாமி அய்யா அவர்கள் பேசும்போது, "அழகப்ப செட்டியார் தலைமையில் அமைக்கப்பட்ட கல்விக் குழுவினர் தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளை எடுத்துவிடவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அவ்வாறு செய்வார்களேயானால் அது கல்வியின் வளர்ச்சிக்கு ஆபத்தாகவே முடியும்" என்பதை விளக்கிக் காட்டினார்.

திருவாளர் ஏ. கே. மாசிலாமணி செட்டியார் எம். எல். ஏ அவர்கள் பேசும்போது, அழகப்ப செட்டியாரின் அறிக்கை துளியும் பயனற்றது என்பதை அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்தார். சட்டசபையில் அதுபற்றிய விவாதம் வரும்போது அதனைத்தான் முழு மூச்சாக எதிர்ப்பேன் என்று அன்னார் உறுதி கூறினார்.

திருவாளர் எஸ். கே. பழனி அய்யா, "ஆரம்பக் கல்வி" ஆசிரியர் பி. வீரராகவன், நேஷனல் உயர்தரப் பள்ளியின் நிர்வாகி திருவாளர் எஸ். புண்ணியகோட்டி முதலியார் முதலிய பலர் மானேஜர்களின் கோரிக்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

மாநாட்டின் பிற்பகல் நிகழ்ச்சியின்போது, முழு நஷ்ட ஈடு தரப்படவேண்டும் என்பதை வற்புறுத்தியும், வட்டாரக் குழுக்களால் பயன் விளையாது என்பதை எடுத்துக் காட்டியும், கல்விக் கமிட்டிகளே தேவை என்பதை எழில்பட விளக்கியும், ஆசிரியர்களின் ஊதியம் ஏன் உயர்த்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியில் இராமலிங்க உயர்தர ஆரம்பப் பள்ளியின் நிர்வாகி திருவாளர் ஆர். மகாதேவ அய்யர் அவர்களால் நன்றி நவிலப்பட்டு மாநாடு சிறப்பாக முடிவுற்றது.

மாநாட்டிற்கான எல்லா ஏற்பாடுகளையும் வேலூர் நண்பர்கள் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றியிருந்தனர்.

# காலமும் கருத்தும்

## தமிழ்நாட்டின் துயரம்

தமிழ்நாட்டிற்கு மகத்தான தோர் துயரம் ஏற்பட்டுவிட்டது. தமிழ் மக்களுக்கு எல்லையற்ற ஓர் வேதனை உண்டாகிவிட்டது. தமிழ் மக்களின் உள்ளத்திற்கு —அதன் தாங்கும் சக்திக்கு ஓர் இணையற்ற சோதனை நேரிட்டு விட்டது.. ஆம்! நவம்பர் 30, டிசம்பர் 1 ஆகிய இரண்டு நாட்களிலும், தமிழ் நாட்டின் மூன்று மாவட்டங்களில் வீசிய புயலையும், நேரிட்ட வெள்ளப் பெருக்கையும், அவற்றின் விளைவாக ஏற்பட்டுள்ள வேதனை நிலைகளையும்தான் குறிப்பிடுகிறோம். மதுரை, தஞ்சை, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும், புயலும் வெள்ளமும், தங்கள் கைவரிசையை, என்றென்றும் நம்மால் மறக்க முடியாத அளவுக்குக் காட்டியிருக்கின்றன. 1952–ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இறுதியில் வீசிய புயலால் ஏற்பட்ட வேதனையே இன்னமும் தீரவில்லை. அதற்குள்ளாக மற்றுமோர் புயல் வீசியடித்து அந்த மாவட்டங்களின் மக்களுடைய உள்ளத்திலெல்லாம் வேதனைப் புயலை உருவாக்கியிருக்கிறது. பெருமழை—கடும் புயல்—அடர்ந்த வெள்ளம் இவற்றின் பயனாக ஏறத்தாழ ஐந்நூறு பேர் மாண்டுபோயிருக்கின்றனர். ஆயிரக் கணக்கான ஏகர் நிலங்கள் வெள்ளக் காடாக மாறியிருக்கின்றன. நூறாயிரக் கணக்கில் ஆடு மாடுகள் பலியாகியிருக்கின்றன. இடிந்த வீடுகள், அழிந்த பொருள்கள், பாழாகிய தோட்டம் துரவுகள் ஏராளம் ஏராளம். அறந்தாங்கி என்னும் ஒரு பகுதியில் மட்டும் 200 ஏரிகள் உடைந்திருக்கின்றன. 20,000 ஏகர் பயிர்கள் நாசமாகியிருக்கின்றன. 10,000 மாடுகளும் 30,000 வெள்ளாடுகளும் மாண்டிருக்கின்றன. நகரில் மட்டும் வீடுகள் இடிந்ததால் 16½ லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களில் ரூ. 50 லட்சம் மதிப்புள்ள வீடுகள் தரைமட்டமாயிருக்கின்றன.

அறந்தாங்கியில் மட்டுமல்ல இந்த அழிவுக்கோலம். வேதாரண்யத்திலிருந்து வந்துள்ள செய்திகளும் வேதனை அளிப்பனவாகவே உள்ளன. இந்தப் பகுதியில், கடல் நீர் உள்ளே புகுந்து, 10 அடி உயரத்திற்குக் கடல் அலைகள் எழுந்து, மண் வீடுகளை யெல்லாம் அடித்துக் கொண்டு சென்றுவிட்டது. இந்தப் பகுதியில் மட்டும் 75,000 மணங்கு சேமிப்பு உப்பு கடலுடன் கலந்துவிட்டதென்றும், ரூ. 2 லட்சம் மதிப்புள்ள புகையிலை நஷ்டமாயிற்றென்றும் கூறப்படுகிறது.

திருவாடானை என்னும் பகுதியில், எல்லா ஏரிகளிலும் உடைப்பு ஏற்பட்டு, 40,000 ஏகரா நெற்பயிரும், 8,000 ஏகரா வரகுப் பயிரும் வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறதாம். ரூ. 50 இலட்சத்திற்குச் சொத்துச் சேதம் ஏற்பட்டுள்ளதாம்.

திருத்துறைப்பூண்டியில் 700 ஏகர் நன்செய்ப் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியிருக்கிறதென்றும், 2300 வீடுகள் பாழாகியுள்ளன என்றும் தெரிகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 80 லட்சம் ரூபாய்க்கு மேல் சொத்து நாசம் ஏற்பட்டிருக்கிறதாம்.

பற்பல கிராமங்கள் நாற்புறமும் வெள்ளத்தால் சூழப்பட்டு, ஒரு வார காலத்திற்கு மேல் வெளி உலகத்துடன் தொடர்பற்று இருந்திருக்கின்றன. பற்பல இடங்களில் ரயில் பாதை பாழாகி, ரயில் போக்கு வரத்து தடைப்பட்டுவிட்டது. எல்லா இடங்களுடனும் போக்கு வரத்துத் தொடர்பு இன்னமும் புதுப்பிக்கப்பட முடியாததால், சேதத்தின் முழு அளவு தெளிவாகத் தெரியவில்லை.

நாள்தோறும் தினசரி ஏடுகளில் வெளிவரும் செய்திகள் நெஞ்சைத் திடுக்கிட வைப்பனவாக இருக்கின்றன. இடிந்த வீடுகள்—உடைந்த ஏரிகள்—பாழாகிய வயல்கள்—பொலிவிழந்த தோட்டங்கள்—பிணமான மனிதர்கள்—நடைப்பிணமாக வாழ்பவர்கள்—இதுதான் தஞ்சை திருச்சி இராமனாதபுரம் மாவட்டங்களின் சோகக் கதையாகிவிட்டது இதுபோது.

## அவசரமாகத் தேவை

ஆமாம்—உடனடியாக— அவசரமாக—இப்போதே தேவை. ஏராளமான அளவில்—தாராளமான முறையில் தேவை. உணவு, உடை, இருப்பிடம், பணம், வாழ ஒரு வழி, போதுமான ஒரு வசதி — இத்தனையும் தேவை. புயலில் சிக்குண்டு வாடி வதைபடும் தமிழ் மக்களுக்கு இத்தனையும் தேவைப்படுகின்றன இன்றைய தினம். சென்னை அரசாங்கம் இத் துறையில் விரைந்து ஈடுபட்டு நல்லதோர் பணியாற்றியிருக்கிறது. முதலமைச்சர் காமராஜர் வெள்ளப் பகுதிக்கு விரைந்து சென்று, சேதத்தை நேரில் பார்வையிட்டு, நிலைமையை நேர்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். வீடு வாசல் இழந்து தவிக்கும் மக்களுக்கு உணவுப் பொருட்கள் உடனடியாகக் கிடைப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. எந்தவிதப் போக்கு வரத்தும் அற்றுப் போயிருக்கும் பகுதியில், நின்ற நிலையில் தத்தளித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு விமானம் மூலம் உணவுப் பண்டம் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் மட்டுமல்லாமல் பல்வேறு கட்சிகளும் வெள்ள நிவாரண வேலையில் ஈடு

பட்டிருக்கின்றன. சென்னை கவர்னரைப் பாதுகாவலராகவும், முதலமைச்சரைத் தலைவராகவும் கொண்ட வெள்ள நிவாரண நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் பெருந்தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம், இந் நிதிக்கு 1000 ரூபாய் நன்கொடை தந்திருக்கிறது. இவ்வாறே பல தனிப்பட்டவர்கள், அரசியல் அமைப்புகள், சமூக சேவா சங்கங்கள் ஆகியவர்களின் நன்கொடை திரண்டுகொண்டிருக்கிறது. இந்தச் செய்திகளெல்லாம், புயலால் தாக்குண்டு புலம்பியழும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் அருமருந்தாக உள்ளன. என்றாலும், வெள்ளத்தின் அளவையும், புயலின் கொடுமையையும், சேதத்தின் நிலையையும் எண்ணிப் பார்க்கும் போது, இன்னமும் பெரிய அளவில், அரசாங்கத்தாரும் பிறரும் முயற்சி புரிந்தாக வேண்டியது அவசியம் என்பது விளங்காமற் போகாது. பொது மக்களே! நண்பர்களே! ஆசிரியர்களே! மானேஜர்களே! எல்லோரும் திரண்டெழுங்கள்! நிதிமிகுத்தவர் பொற்குவை தாருங்கள்! நிதி குறைந்தவர் காசுகள் அருளுங்கள்! அதுவு மற்றவர், பழைய துணிகளை அளியுங்கள்; உணவுப் பண்டம் வைத்திருப்பவர்கள் அதனைக் கொடுத்து உதவுங்கள். வீடுகள் கட்டுவதற்குத் தேவையான மூங்கில், மரம் முதலிய பண்டங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை அளித்து உதவுங்கள். இவற்றில் எதுவுமே இல்லாதவர்கள், இவை வைத்திருப்பவர்களிடமிருந்து, இவற்றை ஒன்று திரட்டி உருவாக்கி அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கும் நற்பணியில் ஈடுபடுங்கள். அவசியம் மிக்க பணி. அவசரம் நிரம்பிய தொண்டு. கவனியுங்கள். கவனியுங்கள்.

## உள்ளம் நிறைந்த வரவேற்பு!

சோவியத் ரஷ்யாவின் முதலமைச்சர் தளபதி புல்கானின், செயலாளர் குருஷ்சேவ் ஆகிய இருவரும் நவம்பர் மாதத்தில் இரண்டு வார காலம் இந்தியத் துணைக் கண்டத்தின் விருந்தினராக வந்திருந்தனர். டில்லி, பம்பாய், கல்கத்தா, முதலிய பல நகரங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள தொழிற்சாலைகளின் வளர்ச்சியையும், மாட்டுப் பண்ணைகளின் நிலைமையையும், இயற்கைக் காட்சிகளின் வனப்புகளையும், நேரில் கண்டறிந்து மகிழ்ந்தனர். செல்லுமிடம் எங்கும் புதுயுகத் தலைவர்களே வருக வருக என்று மக்கள் கூட்டத்தால் மனமார வரவேற்கப்பட்டனர். ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனுமில்லை எம் நாட்டினில் என்கிற புதியதோர் சகாப்தத்தை உருவாக்கிய சோவியத் பூமியின் தலைவர்களல்லவா அவர்கள். எனவேதான் பாட்டாளி வர்க்கத்தினரும் நடுத்தர மக்களும் லட்சக் கணக்கில் திரண்டு கூடி, மலர் மாலைகளை மலைபோல் குவித்து, புன்னகை



பூத்த முகத்துடன், தலைவர்களை வரவேற்று மகிழ்ந்தனர். சோவியத் தலைவர்களுக்கு இந்திய மக்கள் அளித்த வரவேற்பு இரு நாடுகளுக்கும் இடையே உ.ள்ள அன்பையும் தோழமை உணர்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுவது போல அமைந்திருந்தது. வாழ்க இந்தத் தோழமை— வளர்க இந்தப் பாசம் என்று மனமார வாழ்த்தாமலிருக்க முடியுமா நாம்?

## அதிலென்ன தவறு?

சென்னை நகரில் நடைபெற்ற பெரியதோர் கூட்டமொன்றில் பேசும்போது, சோவியத் தலைவர்கள், இந்திய மண்ணில் உள்ள கோவாப் பகுதியை, ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள போர்த்துகீசிய ஆட்சியாளர்கள் உடும்புப் பிடிபோல் இன்னமும் பிடித்துக் கொண்டிருப்பது வெறுக்கத் தக்க செயல் என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்தார்கள். போர்த்துகீசிய ஏகாதிபத்யம் இன்னமும் இந்திய மண்ணில் கோர நடனம் புரிந்து கொண்டிருப்பது ஒரு சகிக்க முடியாத சம்பவமே என்று சோவியத் தலைவர்கள் இயம்பியது கேட்டு இந்தியத் துணைக் கண்டத்தவர் அனைவரின் உள்ளமும் பூரித்தது. இந்தியத் துணைக் கண்டத்தவர் மட்டுமா, ஏகாதிபத்யக் கொடுமையை எதிர்த்து ஒழிக்கும் உணர்ச்சி படைத்த எவருடைய உள்ளமும் பூரிக்கத்தானே செய்யும்? ஆனால் ஏனோ தெரியவில்லை. அமெரிக்க

நாட்டு அயல் நாட்டுத் துறை அமைச்சர் ஜான் பாஸ்டர் டல்லசுக்கு மூட்டும் சோவியத் தலைவர்களின் இந்த இன்னுரை பிடிக்கவில்லை. போர்ச்சுகல் நாட்டு வெளி நாட்டுத் துறை அமைச்சரும், டல்லசும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையில், சோவியத் தலைவர்களின் இந்தக் கருத்துரையை மறைமுகமாகக் கண்டித்திருக்கிறார்கள். அமெரிக்க நாட்டு அயல் நாட்டுத் துறை அமைச்சர் இவ்வளவு தவறான ஒரு பாதையில் இத்துணைத் துணிச்சலாகப் புகுந்திருக்கக் கூடாது. கோவா, இந்தியாவின் ஒரு சிறு துண்டு—அதனை ஐரோப்பாவிலுள்ள போர்த்துகீசியர்கள் இன்னமும் எதற்காக ஆண்டு கொண்டிருக்க வேண்டும்? நானூறு ஆண்டுகளுக்கு முன்னால், இந்திய அரசர்கள் ஏமாந்திருந்த நேரத்தில், போர்த்துகீசிய வணிகர் சிலர் அதனைத் தவறான முறையில் கைப்பற்றிக் கொண்டிருக்கலாம். அதனாலேயே அந்தப் பகுதி, என்றென்றும் போர்த்துகீசியரின் ஆதிக்கத்தில் இருக்க வேண்டுமென்பது என்ன நியாயம்? ஒரு நாடு, இன்னொரு நாட்டின் ஒரு பகுதியை ஆள்வது என்பது, நாகரிகத்திற்கும் மனிதப் பண்பாட்டிற்கும் நீதி முறைக்கும் முற்றிலும் மாறானது என்பது அமெரிக்காவுக்குத் தெரியாதா? தெரியும் என்றால், டல்லஸ் வெளியிட்டுள்ள அறிக்கை ஏன் வெளியிடப்பட்டது?

ஒரு காலத்தில், இன்றைய தினம் டல்லஸ் எந்த அமெரிக்க நாட்டின் அமைச்சராக ஒளி வீசித் திகழ்கிறாரோ அதே அமெரிக்கா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கைப்பிடிக்குள் சிக்கிக் கிடந்தது. அந்நாளில் அமெரிக்கா தனி நாடாக இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒரு காலனியாக, ஒரு மாகாணமாக இருந்தது. இந்த அடிமை நிலை கண்டு உள்ளம் நொந்த அமெரிக்க வீரர்கள் ஆயிரமாயிரமாகத் திரண்டு, அஞ்சாநெஞ்சன் வாஷிங்டன் தலைமையில் போராடி, விடுதலை வாழ்வு பெற்றனர். பிரிட்டனின் பிடியிலிருந்து அமெரிக்கா விடுதலை பெற்றது எப்படி நியாயமான ஒரு சம்பவமோ அப்படித்தான், போர்த்துகல்லின் பிடியிலிருந்து கோவா விடுதலை பெற எண்ணுவதும் நேர்மையான ஒரு நிகழ்ச்சியாகும். குழந்தைகளுக்கும் புரியக்கூடிய எளிய உண்மை இது. என்றாலும் டல்லசுக்குப் புரியவில்லையே—ஏன்?

## வாழ்க நம் டாக்டர்!

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நாயுடு—நாய்க்கர்—முதலியார் என்கிற மூன்று சொற்கள் தான் தமிழ் நாட்டு அரசியல் உலகத்தில் அடிக்கடி நடமாடும். முதலியார் என்பது தமிழ்த் தென்றல்—தொழிலாளர் தோழர் திரு. வி. கலியாண

சுந்தரனூர் அவர்களைக் குறிப்பதாகும். நாய்க்கர் என்பது திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களைக் குறிப்பதாகும். நாயுடு என்னும் சொல்லோ, முதுபெருந் தலைவர் டாக்டர் வரதராசலு அவர்களைச் சுட்டிக் காட்டும். தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றதற்கு வித்திட்டவர்கள் இந்த முப்பெருந் தலைவர்களே ஆவர். இவர்களில், டாக்டர் நாயுடு அவர்களின் 68 வது பிறந்த நாள் விழா, 27–11–55 அன்று சென்னையில், மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முதலமைச்சர் காமராஜர் விழாவுக்குத் தலைமை தாங்கினார். விழாவில், பெரியார் ஈ. வெ. ரா, சர்தார் பணிக்கர், டாக்டர் வி. கே. ஜான், ராஜா சர் முத்தையா செட்டியார், கே. ஏ. மதியழகன் ஆகிய பலர் கலந்து கொண்டு, டாக்டர் நாயுடு அவர்களின் அரும்பெருந் தொண்டுகளை விளக்கிப் பேசினர். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. எஸ் கிருஷ்ணசாமி நாயுடு டாக்டர் நாயுடுவின் உருவப் படம் ஒன்றைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார். டாக்டர் நாயுடுவின் பொதுத் தொண்டைப் பாராட்டி, விழாக் குழுவினர், சென்னைப் பல்லாவரம் பகுதியில், அன்னாருக்கு வீடு ஒன்றை வாங்கியளித்தனர். சென்னை மாநில உதவிபெறும் ஆரம்பப் பள்ளி மானேஜர்கள் சங்கச் சார்பில், திருவாளர் பி. வீரராகவன், நாயுடு அவர்களுக்கு வெள்ளிக் கோப்பை ஒன்றை அன்பளிப்பாக அளித்தார். விழாத் தலைவர் டாக்டர் நாயுடு அவர்களின் தொண்டு உண்மையிலேயே நம் உள்ளத்தை அள்ளிக் கொள்ளும் தன்மை வாய்ந்ததாகும். ஏறத்தாழ நாற்பதாண்டுக் காலம் அவர் பொது மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டிருக்கிறார். "தமிழ் நாடு" என்னும் பெயரில் அவர் நடத்தி வந்த அருமையான தமிழ் தினசரியைத் தமிழகம் என்றென்றும் மறவாது. வெள்ளை ஏகாதிபத்யத்தை எதிர்த்துத் தொடங்கப்பட்ட அறப்போர்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறை புகுந்திருக்கிறார். பம்பரம்போல் நாடெங்கும் சுற்றிச் சுழன்று, வீரவுரையாற்றி, மக்களைத் தட்டியெழுப்பி, ஏகாதிபத்ய எதிர்ப்பு முன்னணிக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார். உயர்ந்த உள்ளம், சிறந்த பண்பாடு, எளிய வாழ்க்கை, இவற்றின் தொகுப்பே டாக்டர் நாயுடு. 68 வயதை அடைந்து, முதுமை எய்தியுள்ள இந்த நிலையிலும் அவர் வாளாகிடக்கின்றாரில்லை, தம்மாலான தொண்டுகளைத் தமிழகத்திற்கு ஆற்றிய வண்ணமிருக்கிறார். எல்லாக் கட்சியினராலும் ஒரு சேரப் பாராட்டப்படும் தமிழகத்தின் பழம்பெருந் தலைவர் டாக்டர் நாயுடு அவர்களை நாமும் மனமார வாழ்த்துகிறோம். வாழ்க நம் டாக்டர்! வளர்க அவர் பணிகள்!

## புள்ளி விவரங்கள் பேசுகின்றன !

தென் திருவிதாங்கூரில் உள்ள தேவிகுளம், பீர்மேடு ஆகிய இரண்டு தாலுகாக்களும் தமிழகத்தோடு இணைக்கப்படுவது தான் முறை. ஏனெனில் அந்த இரு தாலுகாக்களிலும் தமிழ் மக்கள்தான் மிகப் பெரும்பாலாராக இருக்கின்றனர். ஆனால் பசில் அலி தலைமையில் அமைக்கப்பட்ட மாநிலச் சீரமைப்புக் குழுவினர், அந்தத் தாலுகாக்களை அமையவிருக்கும் கேரளத்தோடு சேர்க்குப்படி சிபார்சு செய்திருக்கின்றனர். இப்படிப் பட்ட சிபார்சைச் செய்ததற்கு ஒரு காரணத்தையும் குறிப்பிட்டிருக்கின்றனர். அந்த இரு தாலுகாக்களிலும் தமிழர்கள் தான் பெரும்பான்மை என்ற போதிலும், அவர்களில் பெரும் பாலோர் பிழைப்பைத் தேடி அங்கே வந்தவர்களேயென்றும், எனவே, நிரந்தரக் குடிகளல்லர் என்றும் பசில் அலி குழுவினர் இயம்பியிருந்தனர். ஆனால் இந்தக் கூற்று உண்மைதானா? நிச்சயமாக இல்லை. அந்த இரு தாலுகாக்களிலும் வேலை தேடி குடிவந்திருப்பவர்கள் மலையாளிகளே தவிர தமிழர்கள் அல்ல. தேவிகுலத்தைப் பொறுத்தமட்டில் 1931—ல் எடுத்த கணக்குப் படி 51,730 தமிழர்களும் 3894 மலையாளிகளும் இருந்தனர். 1941-ல் 53,394 தமிழர்களும் 8282 மலையாளிகளும் இருந்தனர். 1951—ல் 62,130 தமிழர்களும் 16,056 மலையாளிகளும் இருந்தனர். 1931-ல் 3894 ஆக இருந்த மலையாளிகளின் தொகை 1951-ல் 16,056 ஆக உயர்ந்து விட்டது என்றால், இது குடியேறியதின் விளைவே தவிர வேறென்ன? பீர்மேட்டுப் பகுதியிலும் இப்படித்தான் 1931-ல் 24,776 தமிழர்களும் 19,284 மலையாளிகளும், 1941—ல் 31,911 தமிழர்களும் 31,000 மலையாளிகளும், 1951-ல் 42,590 தமிழர்களும் 50,000 மலையாளிகளும் இருந்திருக்கின்றனர். இங்கேயும் 1931—ல் 19,000 ஆக இருந்த மலையாளிகள் 1951—ல் 50,000 ஆகப் பெருகியிருப்பது, இயற்கையான ஜனத்தொகைப் பெருக்கத்தின் விளைவு என்று எப்படிக் கூற முடியும்? தமிழர்களின் எண்ணிக்கை தேவிகுளத்தில் 51,730-லிருந்து 62,130 ஆகவும், பீர்மேட்டில் 24,776-லிருந்து 42,590-ஆகவும் மட்டுமே உயர்ந்திருக்க, மலையாளிகளின் எண்ணிக்கை மட்டும் முறையே 3894—லிருந்து 16,056—ஆகவும், 19,000—லிருந்து 50,000—ஆகவும் உயர்ந்திருக்கிறது. எனவே மலையாளிகள்தான் இந்த இரு பகுதிகளிலும் அதிகமாகக் குடியேறியவர்கள் என்பதும், இந்த இரு பகுதிகளும் தமிழர்களுக்குத்தான் சொந்தம் என்பதும் தெளிவாக விளங்குகின்றன. ★

# புத்தகப் பூங்கா

★

**The Elite English-English-Tamil Dictionary.** பதிப்பாளர்: எம். துரைசாமி முதலியார் கம்பெனி, 1/1, மலேய பெருமாள் தெரு, சென்னை-1. விலை ரூ. 10.

*திருவாளர் டி. எஸ். உமாபதி எம். ஏ. எல். டி, புலவர் பி. செல்வராஜ் ஆகிய கல்வித் துறை வல்லுநர் இருவர் தம் கூட்டு முயற்சி இந்த அகராதி. இதன் கண் ஏறத் தாழ 25,000 ஆங்கிலச் சொற்களுக்கு ஆங்கிலப் பொருள், தமிழ்ப் பொருள் இரண்டும் தரப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பொருளைத் தரும் போது, கூடிய வரையில் வடசொற்களையும் பிறமொழிச் சொற்களையும் விலக்கி, தூய இனிய செந்தமிழால் விளக்கம் தந்திருப்பது, மிகவும் பாராட்டத்தக்க செயலாகும். மாணவர்கள், ஆசிரியர்கள், இதழாசிரியர்கள், நூல் நிலையங்கள்—நான்கு திறத்தாருக்கும் பெரிதும் பயன்படக் கூடிய நற்சுவடி இது. பொருள் தரும் முறை, தெளிவாகவும் விளக்கமாகவும் திட்டவட்டமாகவும் இருக்கிறது. நல்ல அச்சு. உறுதியான பைண்டு. 1350 பக்கங்கள். விலையும் குறைவு. தமிழகம் இந்த அருமையான அகராதியை மனமார வரவேற்கும் என்பதில் நமக்குத் துளியும் ஐயமில்லை.*


**"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"**

❋

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

❋

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-8

ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

Form of Certificate of Income.
வருமான நற் சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

(தபால் செலவு உட்பட)


❋

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

6 - AUG 1956



வேலூர் மாநாட்டில் திரு. எஸ். இராமாநுஜய்யா
வரவேற்புரை ஆற்றுகிறார்.



மாநாட்டின் தலைவர் டாக்டர் பி. வரதராசலு நாயுடு
தலைமையுரை ஆற்றுகிறார்.



டாக்டர் பி. வரதராசலு நாயுடு அவர்களின் 68–வது ஆண்டு பிறந்த நாள் விழாவின் போது எடுக்கப்பட்டது. (27–11–55)



அவ்விழாவின்போது டாக்டர் அவர்களுக்கு, சென்னை மாநில எய்டட் பாடசாலை மானேஜர்கள், ஆசிரிய–மானேஜர்கள் சங்கத்தாரால், தலைவர் பி. வீரராகவன் அவர்களால் வெள்ளி, அசோக ஸ்தூபி அன்பளிப்பாக அளிக்கப்படுகிறது.

# சென்னை மாநில எயிடட் ஆரம்பப் பள்ளி மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்கள்

# இரண்டாவது மாநாடு

## *19-11-55*

## திருவாளர் எஸ். இராமாநுஜையா

*அவர்கள் ஆற்றிய*

# வரவேற்புரை

அலை அலையாகத் திரண்டு குழுமியிருக்கும் அருமை மானேஜர்களே!—ஆசிரிய மானேஜர்களே!

உங்கள் அனைவரையும் வருக வருக என மனமார வரவேற்கிறேன். இந்த மாநாடு, திடீரென முடிவு செய்யப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் கூட்டப்பட்டிருக்கிறது. எனவே இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகளில் குற்றம் குறைகள் பல இருக்கக்கூடும். அவற்றை அன்பு கூர்ந்து பொருத்தருள வேண்டுகிறேன்.

## நெருக்கடியான நேரம்

எயிடட் ஆரம்பப் பள்ளி மானேஜர்களாகிய நமக்கு இது மிகவும் நெருக்கடியான ஒரு நேரம். நம்முடைய பள்ளிக்கூடங்களுக்கு நல்லதோர் எதிர்காலம் உண்டா இல்லையா என்பதே சந்தேகத்திற்குரிய ஒரு பிரச்சினையாகிவிட்ட வேளை. அரசாங்கத்தார் திடீர் திடீரென்று பிறப்பித்து வருகிற உத்தரவுகளால் நாம் நம்முடைய பள்ளிக்கூடங்களை ஒழுங்கான முறையில் நடத்த முடியாமல் தத்தளிக்கிற சமயம். அடுக்கடுக்காக ஆபத்துக்கள் நம்மை நோக்கிப் பாய்ந்து வருகின்ற கட்டம். இப்படிப்பட்ட நெருக்கடியான ஒரு சமயத்தில் நாம் உறங்கிக் கிடப்போமானால், நமக்கும் நம் பள்ளிக்கூடங்களுக்கும் இந்த மாநிலத்தின் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கும் சிறப்பும் செழிப்பும் மிக்கதோர் எதிர்காலம் இல்லாமற் போய்விடும். எனவேதான் இத்துணை விரைவில் இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது.

## நஷ்ட ஈடு எங்கே?

உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். 19-5-55 அன்று சென்னை அரசாங்கத்தார் ஓர் உத்தரவைப் பிறப்பித்தார்கள். அந்த உத்தரவில், ஆண்டுக்கு 1200 ரூபாய்க்குக் குறைவான வருமான

முள்ள பெற்றோர்களின் பிள்ளைகளிடமிருந்து 1 முதல் 8-வது வகுப்பு வரையில் இனி கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. உயர்நிலைப் பள்ளிகளிலும் சரி, ஆரம்பப் பள்ளிகளிலும் சரி, இந்த உத்தரவு ஜூன் திங்கள் முதல் நடைமுறைக்கு வருகிறது என்றும் அந்த உத்தரவில் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்படி இலவசமாகக் கல்வியை அளிப்பதன் விளைவாகப் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் முழுவதையும் அரசாங்கத்தார் ஈடு கட்டித் தருவார்கள் என்றும் அந்த உத்தரவில் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது.

ஜூன் மாதம் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர்—என்று மாதங்கள் ஒவ்வொன்றாக உருண்டோடியபடி இருக்கின்றன. என்றாலும் இதுவரையில் அரசாங்கத்தார் அளிப்பதாக உறுதி கூறிய நஷ்ட ஈடு நமக்கு வந்து சேரவில்லை. அப்படி வந்து சேராததால், அந்தந்த மாதம் செய்து தீரவேண்டிய செலவுகளுக்குப் பணம் கிடைக்காமல் நாம் திண்டாடித் தவித்துத் தத்தளிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

தரப்படவேண்டிய நஷ்ட ஈட்டை இன்னமும் தராமலிருக்கிறார்களே அரசாங்கத்தார்—பணத்திற்கு என்ன செய்வது—செலவுகளை எப்படிச் செய்வது—பள்ளிக்கூடத்தை எவ்வாறு நடத்துவது என்றெல்லாம் நாம் வேதனைக்கு உள்ளாகிக் கைகளைப் பிசைந்து கொண்டிருந்த நேரத்தில், அரசாங்கத்தார், 14-9-55 அன்று, மற்றுமோர் உத்தரவைத் திடீரென்று பிறப்பிக்கலானார்கள்.

நஷ்டம் முழுவதும் ஈடு கட்டித் தரப்படும் என்று முன்னே கொடுத்த உறுதி மொழியை முற்றிலும் புறக்கணித்துவிட்டு, அரசாங்கத்தார், இந்தப் புதிய உத்தரவில், கீழ்க்கண்ட விகிதங்களின் படிதான், நஷ்ட ஈடு அளிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள் :—

| வகுப்பு | முனிசிபல் அல்லாத பகுதிகள் | முனிசிபல் பகுதிகள் | சென்னை நகரம் |
|---|---|---|---|
| 1. | 0—2—0 | 0—3—0 | 0—4—0 |
| 2. | 0—3—0 | 0—4—0 | 0—6—0 |
| 3. | 0—4—0 | 0—5—0 | 0—8—0 |
| 4. | 0—5—0 | 0—6—0 | 0-10—0 |
| 5. | 0—7—0 | 0—8—0 | 0-12—0 |
| 6. | 0-12—0 | 0-14—0 | 1—2—0 |
| 7. | 1—0—0 | 1—2—0 | 1—6—0 |
| 8. | 1—2—0 | 1—4—0 | 1—8—0 |

## இந்தத் தொகை போதாது

அர்சாங்கத்தார் அறிவித்துள்ள இந்த விகிதங்கள், நாம் வசூலித்து வருகிற கட்டண விகிதங்களில் மூன்றில் ஒரு பங்குகூட இல்லை என்பது நீங்கள் அறிந்ததே. இந்த விகிதங்களின்படி நஷ்ட ஈடு தரப்படுமானால், நாம் நம்முடைய பள்ளிக்கூடங்களை மூடுவதைத் தவிர வேறு வழி கிடையாது என்பதும் நீங்கள் அறிந்தது தான். இவ்வளவு குறைவான நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொண்டு பள்ளிக்கூடத்திற்குத் தேவையான எல்லாச் செலவுகளையும் நிறைவேற்றுவது என்பது ஒருக்காலும் இயலாத செயல். ஆசிரியர்களுக்கான சம்பளத்தை அரசாங்கம் கொடுத்துவிடுகிறது என்பது உண்மைதான். ஆனால் ஆசிரியர்களின் சம்பளம் என்கிற அந்த அளவோடு பள்ளிக்கூடச் செலவுகள் முடிந்துவிடுவதில்லை. ஆசிரியர்களுக்கு நிர்வாகிகள் தரவேண்டிய அதிகப்படி ஊதியம், வேலைக்காரிகள்—ஆயாக்கள்—தோட்டிகளுக்குச் சம்பளம், கைத்தொழிற் பயிற்சிக்குத் தேவையான பண்டங்கள் வாங்குவது, ஆசிரியர்களின் பிராவிடண்ட் நிதிக்கு நிர்வாகிகள் செலுத்தவேண்டிய தொகை, பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கு வாடகை, கல்விப் பயிற்சிக்குத் தேவையான கருவிகள் பண்டங்கள் மேசை நாற்காலிகள் வாங்குவது, வீட்டு ரிப்பேர் முதலிய எண்ணற்ற செலவுகளை நிர்வாகிகள் செய்து தீரவேண்டியிருக்கிறது. இத்தனை செலவுகளையும், நிர்வாகிகள், பள்ளிப் பிள்ளைகளின் கட்டணத்தைக் கொண்டுதான் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது. சில பள்ளிக்கூடங்களுக்கு நிர்வாக உதவி (Management grant) என்ற பெயரால் 15% பணம் அரசாங்கத்தாரால் தரப்படுகிறது என்பது உண்மைதான். ஆனால் இந்த நிர்வாகக் கிராண்ட் எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் தரப்படுவதில்லை. அதிலும் சிறப்பாக நகரப் பள்ளிகளில் உள்ள பள்ளிகளுக்கு இந்தக் கிராண்ட் கிடைப்பதேயில்லை. கிடைக்கும் பள்ளிகளிலும், அந்தப் பள்ளிகளின் செலவு முழுவதையும் ஈடு கட்டுகிற அளவுக்குக் கிராண்ட் தரப்படுவதில்லை. எனவே மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கக்கூடாது என்றால், அந்தக் கட்டணத் தொகைக்கு ஈடான முழு நஷ்ட ஈட்டைத் தந்தாலொழியப் பள்ளிக்கூடச் செலவுகள் முழுவதையும் தாங்கிக்கொள்வது முடியாத செயலேயாகும்.

### ஓர் எடுத்துக்காட்டு

எடுத்துக் காட்டாக 1 முதல் 5-வது வகுப்பு வரை உள்ள ஓர் ஆரம்பப் பள்ளியின் வரவு செலவுக் கணக்கைக் காண்போம். இந்தப் பள்ளிக்கூடம் பொருளாதார வசதியுள்ள நகரப் பகுதியைச் சேர்ந்த

ஒரு வட்டாரத்தில் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இந்தப் பள்ளிக்கூடத்தில், வகுப்புக்கு 20 பேர் வீதம், 5 வகுப்புகளுக்குமாக மொத்தம் 100 பேர் படிக்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். அப்படி வைத்துக்கொண்டால், ஏற்கனவே வசூலித்து வரப்படுகிற கட்டண விகிதங்களின்படி, அந்தப் பள்ளிக்கூடத்தின் வரவுத் தொகை கீழ்க்கண்ட விதமாக இருக்கும்.

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | வசூலிக்கப்படும் கட்டணம் | மொத்தத் தொகை |
|---|---|---|---|
| 1. | 20 | ரூ. 1—0—0 | ரூ. 20—0—0 |
| 2. | 20 | 1—4—0 | 25—0—0 |
| 3. | 20 | 1—8—0 | 30—0—0 |
| 4. | 20 | 1-12—0 | 35—0—0 |
| 5. | 20 | 2—0—0 | 40—0—0 |
| | | மொத்தம் வசூல் | ரூ. 150—0—0 |

அதே பள்ளிக்கூடத்திற்கு அரசாங்கத்தார் அறிவித்துள்ளபடி நஷ்ட ஈடு தரப்படுமானால் கிடைக்கும் வருமானம் கீழ்க்கண்ட முறைப்படிதான் இருக்கும்.

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | நஷ்ட ஈட்டு விகிதம் | மொத்தத் தொகை |
|---|---|---|---|
| 1. | 20 | 0—4—0 | 5—0—0 |
| 2. | 20 | 0—6—0 | 7—8—0 |
| 3. | 20 | 0—8—0 | 10—0—0 |
| 4. | 20 | 0-10—0 | 12—8—0 |
| 5. | 20 | 0-12—0 | 15—0—0 |
| | | மொத்த வரவு | ரூ. 50—0—0 |

அதே பள்ளிக்கூடத்திற்கு மாதந்தோறும் ஆகிற சராசரி செலவு எவ்வளவு என்பதைக் கவனிப்போம்.

| செலவு வகை | தொகை |
| --- | --- |
| கட்டிட வாடகை | ரூ. 75—0—0 |
| 5 ஆசிரியர்களுக்கும் தரப்படும் அதிகப்படி ஊதியம் | 15—0—0 |
| பிராவிடண்ட் நிதிக்கு நிர்வாகிகள் தரும் தொகை | 5—0—0 |
| ஆயாக்களின் ஊதியம் | 15—0—0 |
| வேலைக்காரியின் சம்பளம் | 10—0—0 |
| தோட்டியின் சம்பளம் | 5—0—0 |
| கட்டிடத்திற்குச் சுண்ணும்படிப்பது, பழுது பார்ப்பது முதலிய செலவுகள் | 5—0—0 |
| பண்டங்கள் கருவிகள் முதலிய சாமான்கள் | 2—0—0 |
| சில்லரைச் செலவுகள் | 3—0—0 |
| மொத்த செலவு | ரூ. 135—0—0 |

ஆம்! தற்போதுள்ள கட்டண வசூலின்படி இந்தப் பள்ளிக் கூடத்திற்குக் கிடைக்கும் வருமானம் ரூபாய் 150. ஆகும் செலவு ரூபாய் 135. மிச்சமிருப்பது 15. ரூபாய். ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவி, அதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து, அதன் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடு படுகிற மானேஜருக்கு, அவருடைய அருந் தொண்டிற்கு ஈடாகக் கிடைத்த பலன், கேவலம் இந்தப் பதினைந்து வெள்ளிப் பணம்தான். இந்தச் சின்னஞ்சிறு தொகைகூட அவருடைய அரும்பெரும் பணிக்கு ஈடாகக் கிடைக்கவில்லையென்றால், அவர் ஓர் பள்ளிக் கூடத்தை ஏன்தான் நிறுவவேண்டும்? ஏன்தான் நடத்தவேண்டும்? அவருடைய குடும்பத்திற்கான செலவுகளைத்தான் அவர் எப்படிச் செய்ய முடியும்? நியாயமாகப் பார்த்தால், அவருடைய அரிய தொண்டுக்காகக் குறைந்தது 100 ரூபாயாவது கிடைத்தாக வேண்டும். வாழ்க்கைச் செலவுகள் விஷம் போல ஏறிக் கிடக்கிற இந்தக் காலத்தில், மாதந்தோறும் ரூபாய் 100 கூடக் கிடைக்கவில்லையென்றால் ஒரு மானேஜர் தன்னுடைய குடும்பப் படகை வாழ்க்கைக் கடலில் எவ்வாறு ஓட்டிச்செல்ல முடியும்? இதனை அரசாங்கத்தார் நிதானமாகச் சிந்தித்துப் பார்த்து நேர்மையான ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்பதே நம்முடைய வேண்டுகோள்.

தற்போது வசூலிக்கப்படுகிற கட்டண விகிதத்தின்படி வருமானம் ரூ. 150. செலவு ரூ. 135. மிச்சம் ரூ. 15. ஆனால்

அரசாங்கம் அறிவித்துள்ள நஷ்ட ஈட்டு விகிதத்தின்படியோ, வருமானம் ரூ. 50. செலவு ரூ. 135. ஆகவே நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தால் ஒரு பள்ளிக்கூடத்தை எப்படி நடத்திச் செல்ல முடியும்? அரசாங்கம்தான் இந்தக் கேள்விக்கு விடை அளிக்க வேண்டும்.

நிலைமை இப்படி இருக்கும் காரணத்தால்தான் அரசாங்கத்தார் அறிவித்துள்ள நஷ்ட ஈட்டு விகிதங்கள் சிறிதளவும் பொருத்தமானவையல்ல என்று நாம் தெரிவிக்கிறோமே தவிர, அரசாங்கத்திற்கு வீண் தொந்தரவு அளிக்க வேண்டுமென்பது நம்முடைய நோக்கமல்ல.

## ஏன் இந்த விபரீதம்?

19—5—55 ல் தான் இலவசக் கல்வி உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. 1954—ல் இப்படி ஓர் உத்தரவு உருவாகும் என்று எந்த மானேஜருக்கும் தெரியாது. எந்த மானேஜருக்கும் மட்டுமா—இந்த உத்தரவைப் பிறப்பித்த முதலமைச்சர் கனம் காமராஜருக்கே கூட 1955—ல் தன்னால் இப்படி ஓர் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று 1954—ல் தெரியாது. எனவே 1955 ல் தனக்கு அதிக நஷ்டஈடு கிடைக்க வேண்டுமென்பதற்காக 1954 ல் வேண்டுமென்றே பள்ளிக்கூடக் கட்டணங்களை அதிகப்படுத்தி விட்டார் என்கிற குற்றச் சாட்டை எந்த மானேஜர் மீதும் எவரும் சுமத்துவதற்குத் துளியும் இடமில்லை. இப்படிப்பட்ட நிலையில், 1954 ல் ஒவ்வொர் பள்ளிக்கூடமும் எந்த விகிதங்களின்படி கட்டணங்களை வசூலித்து வந்ததோ அதே விகிதங்களின்படி நஷ்ட ஈட்டை அளிப்பது தானே முறை? அதுதானே நியாயம்? அப்படிச் செய்வது தானே நேர்வழி? அவ்வாறு செய்தால் தானே ஆரம்பப் பள்ளிகள் அருகு போல் வேரூன்றி ஆல் போல் தழைத்து அரும் பணி ஆற்ற முடியும்? நிலைமை இவ்வளவு தெளிவாகவும் திட்டமாகவும் இருக்கும்போது, அரசாங்கத்தார் ஏன் இந்த நேரிய பாதையை விட்டு, குறுக்கு வழிகளிற் புகுந்து, வேதனை தரும் உத்தரவுகளைப் பிறப்பித்து, ஆரம்பப் பள்ளிகளை நடத்த முடியாமற் செய்ய வேண்டும்?

## அழகப்பா குழுவின் அறிக்கை

அரசாங்கத்தாரின் உத்தரவுதான் இத்துணை விபரீதமாக இருக்கிறதென்றால், டாக்டர் அழகப்ப செட்டியாரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆரம்பக் கல்வி ஆராய்ச்சிக் குழு; இதைவிட ஒரு படி மேலே சென்று, இதனினும் மோசமான ஓர் சிபார்சைச் செய்திருக்கிறது.

அரசாங்கத்தார், ஒவ்வோர் ஆரம்பப் பள்ளிக்கும், அடுத்த ஆண்டிலிருந்து எந்த மாணவனிடமிருந்தும் கட்டணம் வசூலித்தல் கூடாது என்று, ஓராண்டுக் கால 'நோட்டீஸ்' கொடுக்க வேண்டுமாம். அந்த ஓராண்டுக் காலத் தவணை முடிந்ததும், எந்தப் பள்ளிக்கூடமும் எந்த மாணவனிடமிருந்தும் கட்டணம் வசூலிக்கக் கூடாதாம். எந்தப் பள்ளிக்கூடமும் அரசாங்கத்திடமிருந்து நஷ்டஈடும் கேட்கக் கூடாதாம். இது அழகப்பா குழுவின் அதி அற்புதமான ஓர் ஆலோசனை.

இவ்வளவு அற்புதமான ஓர் யோசனை இந்தக் குழுவினர் எப்படித்தான் கண்டு பிடித்தார்களோ நமக்குத் தெரியவில்லை.

சம்பளமும் வாங்காதே—நஷ்ட ஈடும் கிடையாது என்று சொல்லி விட்டால் பள்ளிக்கூடம் எப்படி நடக்கும்?

ஆசிரியர்களின் ஊதியத்தைப் பொறுத்த அளவில், பணம், அரசாங்கத்தால் தரப்பட்டு விடுகிறது என்பது உண்மைதான்.

ஆனால் ஏனைய செலவுகளுக்கெல்லாம் பணம்?

பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வாங்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தால், அப்படி வாங்காததால் ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் ஈடுகட்டித் தருவதுதான் நியாயம்.

பள்ளிக்கூடம் நடந்தாக வேண்டும் என்றால் சம்பளம் வாங்கியாக வேண்டும், சம்பளம் வாங்கக் கூடாது என்றால் நஷ்டஈடு கொடுத்தாக வேண்டும்.

இந்த முறைப்படி நடந்தால்தான் பள்ளிக்கூடங்களை நடத்த முடியும்.

ஆனால், "இந்த மாநிலத்தில் மொத்தமுள்ள உதவி பெறும் பள்ளிகள் 10,178-ல் ஏறத்தாழ 1000 பள்ளிகள் மட்டும் தானே பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வாங்குகின்றன! மிச்சமுள்ள 9000 பள்ளிகளும் சம்பளம் வாங்குவதில்லையே! அவைகள் மட்டும் எப்படி நடக்கமுடிகிறது?" என்று சிலர் வினவுகின்றனர்.

கேள்வி நியாயமானதுதான். ஆனால் சம்பளம் வாங்காத 9000 பள்ளிகளும் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் இருப்பவை என்பதையும், சம்பளம் வாங்குகிற 1000 பள்ளிகளும் பெரும்பாலும் நகரப் பகுதிகளில் இருப்பவை என்பதையும், கேள்வி கேட்பவர்கள் மறந்து விடுகிறார்கள்.

நகரப் பகுதிகளில், மாதம் 60 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்கு வாடகை தரவேண்டியிருக்கிறது. இந்தச் செலவு கிராமப் பகுதிகளில் கிடையாது. மாதம் 5 ரூபாய் கொடுத்தால் போதும். கிராமங்களில் கட்டிடம் கிடைத்து விடும். அந்தச் செலவுகூட இல்லாமல், சத்திரம், சாவடி, புறம்போக்கு நிலங்களில் கொட்டகை அமைப்பது போன்ற முறைகளில் பள்ளிக் கூடத்தை நடத்துவதும் கிராமங்களில் இயலக்கூடிய செயலே. ஆனால் நகரங்களில், இப்படிப்பட்ட இடங்கள் கிடைப்பதும் அரிது. கிடைத்தாலும், நகரப் பிள்ளைகள் இப்படிப்பட்ட இடங்களில் அமைந்துள்ள பள்ளிகளுக்கு வரமாட்டார்கள்.

நகரப் பகுதிகளில் உள்ள பள்ளிகள், ஆயாக்கள்—தோட்டிகள்—வேலைக்காரிகள்—ஆகியவர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. இந்தச் செலவே மாதம் சுமார் 30 ரூபாய் ஆகிவிடுகிறது. கிராமப் பகுதிகளில், குழந்தைகளை அழைத்துவரும் ஆயாக்கள் அவசியமில்லை. வேலைக்காரிகளும் தோட்டிகளும் மிக மிகக் குறைந்த சம்பளத்திற்கு வருவார்கள்.

கிராமப் பகுதிகளில் பண நடமாட்டம் மிகக் குறைவு. எனவே சம்பளம் வசூலிக்க முடியாது. ஆனால் அரிசி, பருப்பு, விறகு, நெய், பால், தயிர் முதலிய பண்டங்கள் எளிதில் கிடைக்கும். கிராமப் பகுதிகளில், பள்ளிக்கூட நிர்வாகிகள், வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ, அவர்களாகக் கேட்டோ அல்லது பெற்றோர்களாகக் கொடுத்தோ, எப்படியோ ஒன்று, இப்படிப்பட்ட பண்டங்களைப் பெற்று வருகின்றனர்.

கிராமப் பகுதிகளில், பள்ளிக்கூட நிர்வாகிக்கு உள்ள வாழ்க்கைச் செலவு குறைவு. ஆனால் நகரப் பகுதிகளிலோ வாழ்க்கைச் செலவு அதிகம். அதிலும் சென்னையைப் போன்ற பெரிய நகரங்களில், வீட்டு வாடகையும் ஏனைய செலவுகளும் பொறுக்க முடியாத அளவுக்கு அதிகம் என்பது எவரும் அறிந்த உண்மை.

இத்தனைக் காரணங்களையும் ஒரு சேர எண்ணிப் பார்த்தால் தான், நகரப் பள்ளிகளில் ஏன் சம்பளம் வசூலிக்கப்படுகிறது என்பதும், கிராமப் பகுதிகளில் ஏன் வசூலிக்கப்படவில்லை என்பதும் தெளிவாக விளங்கும். நிர்வாகக் 'கிரண்ட்' பெரும்பாலும் கிராமப் பள்ளிகளுக்குத்தான் தரப்படுகிறது என்பதையும், நகரப் பள்ளிகளுக்குத் தரப்படுவதில்லை என்பதையும் இச்சமயத்தில் நினைவு படுத்திக் கொண்டால், நகரப் பள்ளிகள் சம்பளம் வசூலிப்பதின் நியாயம் நன்றாக விளங்கும்.

ஒரு வேளை இப்படியெல்லாம் பள்ளிக்கூட நிர்வாகிகளை சங்கடத்திற்கு உள்ளாக்கி, அதன் மூலம் எயிடட் பள்ளிக்கூடங்களை மூடும்படி செய்வதுதான் அழகப்பா குழுவின் நோக்கமோ என்றுகூட நாம் ஐயப்படுகிறோம்.

அழகப்பா குழுவிற்கோ, அல்லது அரசாங்கத்திற்கோ அப்படிப்பட்ட உள்நோக்கம் ஏதாவது இருந்தால் அதைத் தெளிவாகச் சொல்லி விடட்டும்.

எயிடட் பள்ளிகள் இந்த மாகாணத்தில் இருக்க வேண்டுமா வேண்டாமா?

இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தெளிவான ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்.

எயிடட் பள்ளிகள் இருக்கத்தான் வேண்டும்—அவற்றால் சிறந்த பலன் இருக்கத்தான் செய்கிறது என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தால் அதனைத் தெளிவாக அறிவித்து விடட்டும்.

ஒரு வேளை, எயிடட் பள்ளிகள் தேவையேயில்லை—அவற்றால் பயன் எதுவுமே இல்லை என்பது அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தால், அதனையும் அழுத்தந் திருத்தமாக அறிவித்து விடட்டும்.

எயிடட் பள்ளிகளும் இருக்கத்தான் வேண்டும், அவற்றில் சம்பளமும் வசூலிக்கக் கூடாது என்பது அரசியலாரின் எண்ணமாக இருந்தால் போதுமான நஷ்ட ஈட்டைத் தந்தே ஆகவேண்டும்.

இல்லை—எயிடட் பள்ளிகளே தேவையில்லை என்பது அரசாங்கத்தின் கருத்தானால்—அந்தக் கருத்தை அறிவிப்பதற்கு முன்னால், அப்படிப்பட்ட முடிவுக்கு வருவதன் மூலமாக அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நஷ்டம் எவ்வளவு என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்து கொள்ளட்டும்.

எயிடட் நிர்வாகிகள் தங்களுடைய பள்ளிகளை மூடிவிட்டால், அரசாங்கமே அந்தப் பள்ளிகளை எடுத்து நடத்தவேண்டி வரும். அல்லது புதிய பள்ளிகளைத் தொடங்க வேண்டியிருக்கும்.

ஒவ்வோர் பள்ளிக்கூடத்திற்கும், அது தனிப்பட்டவர்களிடம் இருக்கும்போது அரசாங்கத்தால் செலவிடப்படும் தொகையைவிட, அரசாங்கமே அதனை எடுத்து நடத்தும்போது; குறைந்தது மூன்று மடங்கு அதிக செலவாகும்.

இதிலே எவருக்கும் எந்த அளவிலும் ஐயம் இருக்கத் தேவையில்லை

## நிர்வாகக் குழு ஏன்?

அழகப்பா குழுவினர் மற்றோர் யோசனையைத் தெரிவித்திருக்கின்றனர். அந்த யோசனையின்படி,

தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் உள்ள ஒவ்வோர் பள்ளிக்கூடத்திற்கும், பதிவு செய்யப்பட்ட ஒவ்வோர் நிர்வாகக் குழு **(Managing Committee)**, ஏற்படுத்தவேண்டுமாம். இந்தக் குழுவில், அரசாங்கம், ஒன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளை நியமிக்க வேண்டுமாம். எத்தனை விரைவில் முடியுமோ அத்தனை விரைவில் இத்தகு குழுக்களை அமைத்துவிடவேண்டுமாம். இந்தக் குழுக்கள் அமைந்தது முதல், பள்ளிக்கூடங்களின் நிர்வாகம், இந்தக் குழுக்களிடம்தான் இருக்கவேண்டுமே தவிர தனிப்பட்டவர்களிடம் இருக்கக்கூடாதாம்.

இப்படி ஒரு நிர்வாகக் குழு இல்லாததால் இதுவரை ஏற்பட்ட நஷ்டம் என்ன? இப்படி ஒரு குழு இனி ஏற்பட்டுவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய இலாபம் என்ன?

தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகள் மிகச் சிறந்த முறையில் நடந்து வருகின்றன. இதனைக் கல்வித் துறையில் அனுபவம் படைத்த அத்தனைப் பேரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நிலைமை இப்படி இருப்பதால்தான், நகரசபையினரால் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வி இலவசம் என்றாலும்கூட, தங்கள் பிள்ளைகளை அந்தப் பள்ளிகளுக்கு அனுப்பாமல், தனிப்பட்ட பள்ளிகளில் சம்பளம் உண்டு என்றாலும்கூட, தங்கள் பிள்ளைகளை அந்தப் பள்ளிகளுக்குத்தான் அனுப்பி வருகிறார்கள் எண்ணற்ற பெற்றோர்கள்.

தனிப்பட்ட பள்ளிகள், தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் இத்தனைச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கும்போது, அவற்றிற்கு நிர்வாகக் கமிட்டி என்று ஒன்றை ஏற்படுத்தி, குழப்பத்தை ஏன் உருவாக்கவேண்டும்?

நிர்வாகக் கமிட்டி என்று ஒன்று அமைத்தால் அந்தக் கமிட்டி உறுப்பினர்களுக்கும் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்குமிடையே பூசலும் பிணக்கும் வளர்வது நிச்சயம். பகையும் போரும் செழிப்பது உறுதி. அதிலும் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற உறுப்பினர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாகத்தான் பெரும்பாலும் இருப்பார்கள். ஏனைய உறுப்பினர்கள் அத்தனைப் பேரும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அரசாங்க உறுப்பினர்கள் ஒரு கட்சியினராகவும், ஏனைய உறுப்

பினர்கள் வேறு கட்சியினராகவும் இருந்துவிட்டால்—அப்படித் தான் பெரும்பாலும் இருக்கும்—நிர்வாகக் கமிட்டிக் கூட்டங்களில் கட்சிப் பூசல்களும் அரசியல் சண்டைகளும்தான் காட்சி தருமே தவிர பள்ளிக்கூடத்தின் செழிப்பும் சிறப்பும் சிறிதளவும் இடம் பெற முடியாது. இப்படிப்பட்ட நிலையில், ஓர் ஆசிரியரை நியமிப்பது என்றால், அவர் எந்தக் கட்சி என்பதைப் பார்த்து நியமிக்கிற நிலை தான் ஏற்படுமே தவிர, அவருடைய திறமையை முன்வைத்து வேலைக்கு வைக்கிற நிலை வளராது.

அதுமட்டுமல்ல, நிர்வாகக் கமிட்டி என்று ஒன்று ஏற்பட்டு விட்டால், பள்ளிக்கூட நிர்வாகிக்கும், பள்ளிக்கூடத்திற்கும் இப் போது இருப்பதைப் போன்ற நெருக்கமான தொடர்பு அப்போது இருக்க முடியாது.

மற்றோர் பிரச்சினை. புதிதாக அமைகிற நிர்வாகக் கமிட்டியில், இப்போதைய நிர்வாகியின் நிலை என்ன? அவர் தொடர்ந்து இருப் பாரா? இருந்தால், எந்த நிலையில்—எத்தகைய அதிகாரத்தோடு நிர்வாகிக்கும் அதிகாரமிருக்கும்; நிர்வாகக் கமிட்டிக்கும் அதிகார மிருக்கும் என்றால், எந்தெந்த அதிகாரம் யார் யாரிடம் இருக்கும்? இந்த இருவகை நிர்வாகங்களின் விளைவாக ஏற்படும் குழப்பத்தை எப்படித் தீர்ப்பது? நிர்வாகிக்கு என்று எந்தவித அதிகாரமும் இருக்காது என்றால், அவர் அரும்பாடு பட்டு இருபது முப்பது ஆண்டுகளாகப் போற்றி வளர்த்த பள்ளிக்கூடத்தை—அதனுடைய மேஜை, நாற்காலி சாமான்களை—அதனுடைய சிறந்த அமைப்பை நல்ல பெயரை—இத்தனையையும் பணம் கொடுத்து வாங்கப் போகிறதா புதிய கமிட்டி? ஆமாம் என்றால் அதற்குத் தேவையான அளவு பணம் அதனிடம் ஏது?

இத்தனைக் குழப்பங்களையும் ஏற்படுத்துகிறது நிர்வாகக் குழு என்னும் ஏற்பாடு. குழப்பங்கள் அத்தனையையும் ஒரு வகையாகத் தீர்த்து வைத்து, நிர்வாகக் குழுவை அமைக்கிறோம் என்றாலும், அதனால் என்ன பயன் விளைய முடியும்? தனிப்பட்ட மனிதரின் நிர்வாகத்தில் இருப்பதைவிட கமிட்டி ஒன்றின் நிர்வாகத்தில் இருந் தால், பள்ளிக்கூடத்தின் தரம் உயரும் என்பதற்கு ஆதாரம் எங்கே?

தனிப்பட்டோர் பள்ளிகளை விட, நகர சபைகளால் நடத்தப் படுகிற பள்ளிகளிலேயே தரம் குறைவாக இருக்கிறது என்றால், நிர்வாகக் கமிட்டிகளால் நடத்தப்படுகிற பள்ளிகளில் மட்டும் தரம் உயர்ந்துவிடும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

எந்தக் கண்ணோட்டத்திலிருந்து கவனித்தாலும் சரி, "தனிப் பட்ட பள்ளிகளுக்கு நிர்வாகக் கமிட்டி" என்கிற ஏற்பாடு, கவைக் குதவாதது என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

## வட்டாரக் குழுக்கள் வேண்டாம்!

அழகப்பா குழுவினர் அளித்துள்ள மற்றோர் யோசனை பஞ்சாயத்துப் போர்டுகள், ஜில்லா போர்டுகள் ஆகியவற்றால் நடத்தப் பட்டுவரும் ஆரம்பப் பள்ளிகளைப் பற்றியதாகும். இந்தப் பள்ளிக் கூடங்களெல்லாம் சரியான முறையில் நடத்தப்படவில்லை யென்றும், இவற்றிற்குப் போதுமான பொருள் வசதி இல்லை என்றும், எனவே இவை சரியான முறையில் நடத்தப்பட வேண்டுமானால், வட்டாரக் குழுக்கள் (Regional Boards) ஏற்படுத்தப் பட்டு, இவற்றின் நிர்வாகம் அந்தக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் அழகப்பா கமிட்டியினர் தெரிவித்திருக்கின்றனர். இந்த வட்டாரக் குழுக்கள் (Regional Boards) ஏற்படுத்தப் படுவதால் துளியளவு நன்மையும் விளையாது என்பதே என்னுடைய கருத்து. ஏனென்றால் இந்த வட்டாரக் குழுக்கள் ஒவ்வொன்றிலும் ஒன்பது பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்றும், அவர்களில் நான்கு பேர், ஜில்லா போர்டுகளாலும், மூன்று பேர் பஞ்சாயத்துப் போர்டுகளாலும், இரண்டு பேர் அரசாங்கத்தாலும் அனுப்பப்பட வேண்டுமென்று அழகப்பா குழுவினர் அறிவித்திருக்கின்றனர். ஜில்லா போர்டு களாலும் நடத்தப்பட்டு அரசாங்கத்தால் கண்காணிக்கப்பட்டுவரும் தற்போதைய பள்ளிகளின் நிர்வாகம் சிறப்பாக இல்லை என்று தெரி வித்து விட்டு, புதியதோர் குழுவினை ஏற்படுத்தி, அந்தப் புதிய குழுவில், மேற்கண்ட மூன்று சாராரையே—அவர்களின் பிரதி நிதிகளையே உட்கார வைப்பதால் எப்படி முன்னேற்றம் ஏற்பட்டு விடும்? ஜில்லா போர்டுகளும், பஞ்சாயத்துப் போர்டுகளும் இப் போது பள்ளிக் கூடங்களை நேரடியாக நடத்துகின்றன. வட்டாரக் குழுக்கள் ஏற்பட்டால், அதே ஜில்லா போர்டுகளும் பஞ்சாயத்துப் போர்டுகளும், தங்களுடைய பிரதி நிதிகளின் மூலமாகப் பள்ளிக் கூடங்களை நடத்தும். இந்த இருவகை ஏற்பாடுகளுக்கிடையே பிரமாதமான வேறுபாடு என்ன இருக்கிறது? வட்டாரக் குழுக் களின் நிர்வாகம் பஞ்சாயத்துப் போர்டு—ஜில்லா போர்டுகளின் நிர்வாகத்தைவிடச் சிறப்பாக இருக்கும் என்பதற்கு எங்கே ஆதாரம்?

## கல்வி மன்றங்கள் தேவை

தனிப்பட்டவர்கள்—அரசாங்கம்—நகர சபை—ஜில்லா போர்டு பஞ்சாயத்துப் போர்டு ஆகிய பல்வேறு நிர்வாகங்களின் கீழ் உள்ள ஆரம்பப் பள்ளிகளின் நிலை இப்போது இருப்பதைவிட இன்னமும் சிறப்படைய வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு, அதுதான் 1938ல் கலைக்கப்பட்ட கல்வி மன்றங்களை (Educational Councils) மீண்டும் நிலை நாட்டுவது.

ஒவ்வோர் ஜில்லாவுக்கு ஒவ்வோர் கல்வி மன்றம் அமைக்கப் படவேண்டும். இந்தக் கல்வி மன்றத்தில், அந்த ஜில்லாவிலுள்ள ஆரம்ப ஆசிரியர்கள், எயிடட் பள்ளிக்கூட நிர்வாகிகள், நகரசபைகளின் பிரதிநிதிகள், பஞ்சாயத்து மன்றங்களின் பிரதிநிதிகள் கல்வித் துறை வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெறவேண்டும். ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகம் இப்போது இருப்பதைப் போலவே வெவ்வேறு வகையான நிர்வாக அமைப்புகளிடம் இருக்கலாம். ஆனால் புதிய பள்ளிக்கூடங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது, பழைய பள்ளிக் கூடங்கள் சரியாக நடக்காத போது அவற்றிற்கான அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுவது, பள்ளிக் கூடங்களுக்கு அளிக்க வேண்டிய அரசாங்கக் கிராண்டை நிர்ணயிப்பது முதலிய எல்லா அதிகாரங்களும் 1938—ல் இருந்தாற்போல் இந்தக் கல்வி மன்றத்தினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆரம்பக் கல்வித் துறையில், அரசாங்கத்தார், எத்தகைய புதிய திட்டத்தையோ மாறுதலையோ கொண்டு வருவதாக இருந்தால், இந்த மன்றத்தினிடம் அந்தத் திட்டத்தை அனுப்பி, இதன் ஒப்புதலைப் பெற்ற பிறகே அதனை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

ஆரம்பக் கல்வித் துறையில், கல்வி இலாகா அதிகாரிகளும் அரசாங்கமும், நினைத்த நேரத்திலெல்லாம் தலையிட்டுக் கொண்டு மனம் போனபடியெல்லாம் உத்தரவுகளைப் பிறப்பிப்பதால்தான், ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படுகிறது. இந்த வருந்தத்தக்க நிலை மாறவேண்டுமானால் 1938 க்கு முன்பு இருந்த உத்தியோகப் பற்றற்ற Non-Officials Councils கல்வி மன்றங்கள் மீண்டும் இந்த மாகாணத்தில் உருவாக்கப்பட வேண்டும். என்றைய தினம் ஆரம்பப் பள்ளிகளைப் பற்றிய அதிகாரங்கள், கல்வி மன்றங்களிடமிருந்து பறிக்கப்பட்டுக் கல்வி இலாகா அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதோ அன்றைய தினத்திலிருந்து தான், ஆரம்பக் கல்வித் துறையில் வேளைக் கொரு உத்தரவும் நாளைக்கொரு குழப்பமும் உருவாகத் தொடங்கியது என்பதை எவரும் மறுக்க முடியாது. சென்னை மாநிலக் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் அடிக்கடிக் குறிப்பிடுவதைப் போல, கல்வித் துறையில் அரசாங்கம் எவ்வளவு குறைவாகக் குறுக்கிடுகிறதோ அவ்வளவு அதிகமாகத்தான் கல்வி செழித்து ஓங்கி வளர்ந்து ஒளி வீச முடியும்.

## உடனடியாக செய்யப்பட வேண்டியவை

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி, சிறப்பான முறையிலும் பாராட்டத்தக்க வகையிலும் இருக்கவேண்டுமானால் அரசாங்கத்தார் கீழ்க்கண்ட திட்டங்களை உடனே நிறைவேற்றியாக வேண்டும்.

1. எல்லா எய்டெட் பள்ளிகளுக்கும் 1954-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட கட்டண விகிதங்களின்படி முழு நஷ்டஈடு அளிக்கவேண்டும்.

2. அரசாங்கத்தார் தாமாகவே புதிய பள்ளிக்கூடங்களைத் தொடங்கி நடத்த முடியாத நிலையில் இருப்பதால், எங்கெங்கே எயிடட் நிர்வாகிகள் புதிய பள்ளிகளைத் தொடங்க முன் வருகிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு அரசாங்கம் ஆக்கமும் ஊக்கமும் பொருளுதவியும் அளிக்கவேண்டும்.

3. எயிடட் பள்ளிகளுக்கு நிர்வாகக் கமிட்டி அமைப்பது என்கிற அழகப்பா குழுவின் யோசனையை, அதனால் குழப்பமும் பிணக்கும் அரசியல் பூசலும் மட்டுமே உருவாகும் என்கிற காரணத்தால், அடியோடு ஒதுக்கித் தள்ளவேண்டும்.

4. வட்டாரக் குழுக்கள் ஏற்படுத்துவது என்னும் சிபார்சை நிராகரித்துவிட்டு, 1938 வரை சிறப்புடன் பணியாற்றி வந்த கல்வி மன்றங்களை மீண்டும் நிலைநாட்ட வேண்டும்.

5. ஆரம்பப் பள்ளிகளிற் பயிலும் எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் பகல் உணவு, புத்தகம், பலகை, எழுதுகோல், குறிப்புச் சுவடிகள் ஆகியவை அரசாங்கத்தால் இலவசமாக அளிக்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான பணத்தை அரசாங்கம் எப்படியாவது திரட்டியே ஆகவேண்டும். மத்திய அரசாங்கத்திடமிருந்து இதற்கான தொகையைச் சென்னை அரசாங்கம் கேட்டுப் பெறுவது மிகவும் நல்லது.

6. 4-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாய பாடமாகப் புகட்டப்படவேண்டும்.

7. ஆதாரக் கல்வி என்பதற்கு இதுதான் பொருள் என்று இதுவரை யாராலும் விளக்க முடியாததாலும், அந்தக் கல்வியால் உருப்படியான பலன் இருக்கிறது என்று கூறுவதற்கு எத்தகைய ஆதாரமும் இல்லாததாலும், ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றும் முயற்சியைக் கைவிட்டு விட்டு, அந்த முயற்சியில் செலவிடப்படும் தொகை முழுவதையும், புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதில் ஈடுபடுத்த வேண்டும்.

8. ஆரம்பப் பள்ளிகளில், பல்வேறு மதத்துப் பிள்ளைகளும் படிப்பதால் மதக் கல்விக்கு இடமிருக்கக் கூடாது; ஆனால் ஒழுக்கக் கல்வி (Moral Instruction), இப்போது இருப்பதைப் போலவே, தொடர்ந்து இருக்க வேண்டும்.

9. சின்னஞ்சிறு பிள்ளைகளுக்குப் பெரியதோர் பாரமாக அமைந்திருக்கும். ஈ. எஸ். எல். சி. பரீட்சையை உடனடியாக அகற்றிவிட வேண்டும். ஒருக்கால் அந்தப் பரீட்சை இருந்தே தீர வேண்டுமென்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தால், உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு மட்டும் என்று இல்லாமல் உயர்நிலைப் பள்ளிகளிற் பயில்கிற பிள்ளைகளுக்கும் அந்தப் பரீட்சை ஏற்படுத்தப்பட வேண்டும்.

10. உயர்தர ஆரம்பப் பள்ளிகளின் 6, 7, 8 வகுப்புகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளின் 1, 2, 3 வது படிவங்களுக்குமிடையே இப்போதுள்ள எல்லா வேறுபாடுகளும் ஒழிக்கப்பட்டு, இரண்டும் ஒன்றே என்கிற நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

அன்புள்ள மானேஜர்களே! மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டங்களையெல்லாம் அரசாங்கத்தார் ஒப்புக்கொள்ளும்படி செய்ய வேண்டியது நம்முடைய தலை சிறந்த கடமையாகும். விழிப்புடனிருந்து, விரைவாகப் பணியாற்றினால்தான் நம்முடைய கோரிக்கைகள் நிறைவேறும். இதனை நினைவில் வைத்துக்கொண்டு, இந்த மாநாட்டில் தகுந்த திட்டங்களைத் தீட்டிச் சிறந்த முறையில் பணியாற்ற வாருங்கள் என்று உங்களையெல்லாம் அன்போடு அழைக்கிறேன். வணக்கம்.

## வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | திரு. S. இராமானுசய்யா | — தலைவர் |
| 2. | ,, R. மகாதேவய்யர் | — செயலாளர் |
| 3. | ,, S. புண்ணியகோடி | — பொருளாளர் |

## உறுப்பினர்

| | | |
|---|---|---|
| 4. | ,, Y. முத்துகிருஷ்ணய்யா | — வேலூர் |
| 5. | ,, S. K. பழனி அய்யா | — குடியாத்தம் |
| 6. | ,, T. சேஷாத்ரி | — ஆற்காடு |
| 7. | ,, S. முத்துகுமாரசாமி பிள்ளை | — போளூர் |
| 8. | ,, R. ராமச்சந்திர நாயுடு | — ஆரணி |
| 9. | ,, எபினேசர். B. தாமஸ் | — காட்பாடி |
| 10. | ,, K. வெங்கடராஜு | — அரக்கோணம் |
| 11. | ,, A. தங்கவேலு உடையார் | — திருவண்ணாமலை |
| 12. | ,, T. முனிசாமி அய்யர் | — வாலாஜா |

# தெரியுமா?

தொகுப்பாளர்: காரமடை, "துரை. முருகேசன்"

1. மனித இரத்தத்தில் சிவப்பு உயிரணுக்களும், வெள்ளை உயிரணுக்களும் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றின் குறுக்களவு ஒரு அங்குலத்தில் 25,000-ல் ஒரு பங்கு இருக்கும். ஒரு கன அங்குல இரத்தத்தில்- 82,000,000,000 சிவப்பு அணுக்களும் 164,000,000 வெள்ளை அணுக்களும் உள்ளனவாம்.

2. மனித உடலே ஒரு நவீன இயந்திரம்தான். 70 வருடத்தில் இதயம் 2,57,54,40,000 தடவை துடிக்கின்றது. ஒரு மணி நேரத்திற்கு 16 காலன் இரத்தம் வீதம் 70 ஆண்டில் 10,22,00,000 கால்ன் இரத்தம் பீச்சுகிறதாம். ஒரு வினாடிகூட நிறுத்தாமல் 70 வருடங்களில் 3,67,92,000 நிமிடங்கள் இதயம் வேலை செய்கிறது.

3. விரல் நகம் மாதத்திற்கு ஒரு அங்குலத்தில் எட்டில் ஒரு பங்கு ($\frac{1}{8}$) வளருகிறது. சாதாரணமாக 160 நாளில் புது நகம் வளர்கின்றது.

4. அமெரிக்க நாட்டில் பலோமா மலையில் பெரிய வானிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே 200 அங்குலம் குறுக்களவுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடி (Telescope) ஒன்று உள்ளது. அதன் மூலம் 1,800 மைலுக்கு அப்பாலுள்ள மெழுகு வர்த்தியின் சுடரைக் காணலாம்.

5. ஆகாய மண்டலத்தில் ஒரு மைல் உயரத்தில் பறந்து கொண்டிருக்கும் விமானத்திலிருந்து குண்டுகளை வீசினால் அது நிலத்தில் விழ எத்தனை நேரம் ஆகின்றது தெரியுமா? "19" செகண்டு ஆகிறது.

6. ஒரு முறை, ஒரு மனிதனைக் கடிக்கும்பொழுது நாகப் பாம்பு ஒன்பது பேரைக் கொல்லக்கூடிய நஞ்சைக் கக்குகிறது.

7. "க்ளோரா பாரம்" என்ற மயக்க மருந்தை "ஸிம்ஸன்" என்பவர் கண்டுபிடித்தார்.

(44-ம் பக்கம் பார்க்க)

டாக்டர் பி. வரதராசலு நாயுடு, M. L. A.
அவர்கள் தலைமையில்

வடாற்காடு ஜில்லா, வேலூர்,
இலட்சுமணசாமி முதலியார் டவுன் ஹாலில்

19–11–55-ல் கூடிய

## சென்னை மாநில இரண்டாவது மாநாட்டின் போது அரசாங்க உதவிபெற்ற ஆரம்பப் பாடசாலைகளின் மானேஜர்களாலும், ஆசிரிய மானேஜர்களாலும்

நிறைவேற்றப்பட்ட

# தீர்மானங்கள்

1. சென்னை அரசாங்கத்தால், 14–9–55–ல் பிறப்பிக்கப்பட்டிருக்கிற ஜி. ஓ. எம். எஸ். நெம்பர் 1546 என்னும் உத்தரவை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. ஏனென்றால், இந்த உத்தரவு, 19–5–55-ல் ஜி. ஓ. நெம்பர் 926–ன் மூலம், எட்டாவது வகுப்பு வரையில் எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் கல்வி இலவசமாகிற காரணத்தால், பள்ளி நிர்வாகிகளுக்கு ஏற்படுகிற நஷ்டம் முழுவதையும் அரசாங்கத்தார் ஈடு கட்டித் தருவார்கள் என்று கொடுக்கப்பட்டிருந்த உறுதி மொழியை மீறுவதாக அமைந்திருக்கிறது.

ஹரிஜன் மாணவர்களின் சம்பளச் சலுகை, என். ஜி. ஓ. மாணவர்களின் சம்பளச் சலுகை, ஆகியவை உட்பட எல்லாச் சம்பளச் சலுகைகளுக்கும் நஷ்ட ஈடு, ஜி. ஓ. எண் 1546–ன் 1–வது பாராவில் குறிப்பிட்டுள்ள புதிய விகிதங்களின்படிதான் அளிக்கப்படும் என்று, அதே ஜி. ஓ. வின் 3–வது பாராவில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு இந்த மாநாடு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைகிறது.

2. தாங்கள் நடைமுறையில் வசூலித்து வரும் கட்டண விகிதங்களின்படியே ஏழை மாணவர்களின் சம்பளச் சலுகை நஷ்ட ஈடு அரசாங்கத்தால் அளிக்கப்படும் என்று எண்ணி, பள்ளிக்கூட நிர்வாகிகள், 1955–56-ஆம் ஆண்டுக்குரிய சம்பளச் சலுகைகளை, அந்த

அடிப்படையிலேயே வழங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும், புதிய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்கள், 1955–56-ஆம் ஆண்டுக்கும் பொருந்தும் என்று புதிய உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருப்பது நீதிக்கும் நேர்மைக்கும் முற்றிலும் புறம்பானது என்பதை இந்த மாநாடு தெரிவித்துக்கொள்கிறது.

3. ஜி. ஓ. எண் 1546ஐ மாற்றி அமைப்பதற்கு அரசாங்கத்தார் உடனடியாக முன்வந்தாலொழிய, எய்டட் பள்ளி மானேஜர்களால் தங்கள் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்துவது இயலாத செயலாகிவிடும் என்பதை, இந்த மாநாடு மிக மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.

4. நஷ்டஈடு தரப்படவேண்டிய முறை:—19-5-55-க்கு முன்னுலிருந்து பணியாற்றி வரும் பள்ளிகளுக்கு, கடந்த மூன்றாண்டுகளில் அவை வசூலித்து வந்த பள்ளிக் கட்டணங்களின் சராசரியைக் கணக்கிட்டு, அந்த சராசரி கட்டண விகிதத்தின்படி நஷ்டஈடு அளிக்கப்படவேண்டும். சென்னை நகரத்தில் உள்ள பள்ளிகள், முனிசிபல் எல்லைக்குள் உள்ள பள்ளிகள், முனிசிபல் அல்லாத எல்லைக்குள் உள்ள பள்ளிகள் என்கிற பாகுபாட்டை இங்கே கவனிக்கவேண்டிய அவசியமில்லை.

19–5–55–க்குப் பிறகு தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு, அவை தொடங்கப்படுகிற வட்டாரத்தில் ஏற்கெனவே உள்ள பழைய பள்ளிகளுக்குத் தரப்படுகிற நஷ்டஈட்டின் சராசரியைக் கணக்கிட்டு, அதன்படி நஷ்டஈட்டை அளிக்கவேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

5. சிறப்புக் கட்டணங்களைப் பற்றிய பிரச்சினையில், பள்ளிக்கூட நிர்வாகிகளை, உசிதம்போல் நடக்க விட்டுவிடவேண்டுமே தவிர, அந்தப் பிரச்சினையிலும் அரசாங்கத்தார் தலையிடுவதற்கு எவ்வித நியாயமும் இருப்பதாக இந்த மாநாடு கருதவில்லை.

ஆண்டுக்கு எத்தனை முறை கட்டணங்களை வசூலிப்பது என்கிற பிரச்சினையில், ஆங்காங்கே ஏற்கெனவே இருந்துவரும் பழக்கத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதே முறை என்று இம்மாநாடு கருதுகிறது.

6. பள்ளிகள் நடைபெறும் கட்டிடங்களுக்குக் குடிக்கூலிகள், ஆசிரியர்களுக்கு அதிகப்படிச் சம்பளம், ஆசிரியர்களுக்குப் பிராவிடண்ட் பண்டுகளின்மானேஜரின் மான்யம், மானேஜர்களின் போக்குவரவு செலவு, கைத்தொழிற் சாமான்களின் கிரயம், குமாஸ்தாவின் சம்பளம், காகிதம் பேனு மை முதலியவைகளின் கிரயம், குழந்தை

களையஙிழத்துவரும் ஆயாக்களின் சம்பளங்கள், பெருக்குபவர் சம்பளம், தோட்டிகளின் சம்பளங்கள் முதலியவற்றை, 1955–ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து அரசாங்கம் 19–5–55-ல் பிறப்பித்த உத்தரவு நெ. 926–ன்படி 1200 ரூபாயும் அதற்குக் குறைவுமான வருட வருமானமுள்ள பெற்றோர்களது குழந்தைகள், N. G. O. ஹரிஜனக் குழந்தைகள், ஏழைப் பெண்கள் முதலியவர்களுக்கு முழுச் சம்பளச் சலுகைகள் உண்டு என்று கூறியதன் பேரில் சம்பளம் வசூலிக்கப்படாத காரணத்தினால், பல பள்ளிகள் தங்கள் பள்ளிகளின் அவசியமான செலவுகளுக்கு முட்டுப்பட்டு நிற்கின்ற காரணத்தினால், அத்தகைய முட்டுப் பாட்டை போக்கும் வரையில் சென்னை அரசாங்கத்தாரும் கனந்தங்கிய மந்திரிமார்களும் சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களும் உயர் சபை அங்கத்தினர்களும், உடனடியாக நடவடிக்கை எடுத்து உதவும்படியாக இம்மாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

1950–ம் ஆண்டிலிருந்து 1955–ம் ஆண்டு ஜூன் வரை மூன்று மாதத்திற்கு ஒரு முறை கொடுத்து வந்ததற்குப் பதிலாகத், தொடர்ந்து மாதாமாதம் முழு நஷ்ட ஈட்டையும் கொடுத்து வரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. 1955-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து தனிப்பட்ட மானேஜர்களால் நடத்தப்படும் பள்ளிகளில் சம்பள வசூல் நிறுத்தப்பட்டிருப்பதனுலும், அதன் பயனுக, அவைகள் பள்ளிகளின் அவசியமான செலவினங்களைச் சந்திக்கத் திணறுகின்றபடியினுலும், அவற்றிற்குச் சமயத்தில் உதவும் வகையில் தனிப்பட்ட மானேஜ்மெண்டுகளால் சென்ற சில ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்தர வரவுக் கணக்குகளின் சராசரியைக் கணக்கிட்டு அந்தந்தப் பள்ளிகளின் வரவில் 50 சதவீதம் உடனடியாக (Advance) முன்பணமாகக் கொடுத்துதவவேண்டுமென்றும், இத்தொகையைப் பள்ளிக்கூட வருட முடிவுக்குள், சில தவணைகளில் திருப்பி வாங்கிக் கொள்ளவேண்டுமென்றும் இம்மாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

8. அரசாங்கம் 19–5–55 ல் வெளியிட்ட G.O.No. 926-க்கு மாருக 14-9–55–ல் G. O. No. 1546 Ed. மூலம் ஒரு புதிய விகிதம், மானேஜர்களால் இதுகாறும் வசூலிக்கப்பட்டுவந்த விகிதங்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு குறைந்திருக்கும் காரணத்தினால் இம் மாநாடு வருந்துவதோடு, இதுவரை N. G. O. க்களின் குழந்தைகள், ஹரிஜனக் குழந்தைகள், ஏழைப் பெண்கள் முதலியவர்களுக்கு, கொடுத்துவந்த விகிதப்படி போலவே வருட வருமானம் ரூ. 1200–க்குக் குறைந்த பெற்றோர்களது குழந்தைகளுக்கு அளிக்கப்படல் வேண்டுமென்று இம்மாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

G. O. No; 1546, D/14-9-55-ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விகிதம்.

| வகுப்பு | முனிசிபலல்லாத இடம் | முனிசிபல் எல்லை | சென்னை நகர் |
|---|---|---|---|
| I | 0—2—0 | 0—3—0 | 0—4—0 |
| II | 0—3—0 | 0—4—0 | 0—6—0 |
| III | 0—4—0 | 0—5—0 | 0—8—0 |
| IV | 0—5—0 | 0—6—0 | 0-10—0 |
| V | 0—7—0 | 0—8—0 | 0-12—0 |
| VI | 0-12—0 | 0-14—0 | 1—2—0 |
| VII | 1—0—0 | 1—2—0 | 1—6—0 |
| VIII | 1—2—0 | 1—4—0 | 1—8—0 |

9. இம்மாநாடு சென்னை ராஜ்ய அரசாங்கத்திற்கு, அதுவே 30-8-1949-ல் வெளியிட்ட G. O. 2740 Ed. உத்தரவை சுட்டிக் காட்ட விரும்புகிறது. அதில் தனிப்பட்ட நபர்களால் நடத்தப் படும் ஆரம்ப, உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் அரிஜனப் பிள்ளைகளுக்கு 1949-50லிருந்து 10 வருடங்களுக்கு முழுச் சம் பளச் சலுகைகள் அளிக்கப்படுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலவரை, அது தங்கு தடையின்றி அமுலில் இருக்கவேண்டிய தன் அவசியத்தைக் குறித்து இம்மாநாடு அரசாங்கத்தின் கவ னத்தை ஈர்க்க விரும்புகிறது.

10. இச்சென்னை ராஜ்யத்தில் பள்ளி செல்லும் வயதுடைய 63 லட்சம் குழந்தைகளில் 32 லட்சம்தான் பள்ளிக்கூடம் செல்கின் றனரென்றும், இன்னும் 31 லட்சம் குழந்தைகள் படிப்பிக்கப்படல் வேண்டியவர்களென்றும் திரு. அழகப்பச் செட்டியாருடைய ஆரம்பக் கல்விக் கமிட்டி அறிக்கையினால் தெரியவருகிறது. இதற் காகப் பல்லாயிரக் கணக்கான பள்ளிகளை நிறுவவேண்டியது ஜன நாயக அரசாங்கத்தின் கடமையாயிருக்க, கல்வி பரப்புவதில் அரும் பணி ஆற்றிய தனிப்பட்ட நபர்களால் பின்னும் பள்ளிகள் ஏற்படுத்தி, கல்வித் துறையில் நம் நாடு முன்னேற வழி செய்ய வேண்டுமென்று இம்மாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

11. இம்மாநிலத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் சம்பளச் சலுகை நஷ்ட ஈடு கொடுக்கும் முறையினால் கல்வியதிகாரிகளின் அலுவலகங்களில் வேலைச்சுமை அதிகரித்திருப்பதனால், இம் மாநிலத்திலுள்ள டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அலுவலகங்களை மூடிவிட்டு, அவ்வலுவலகங்களில் வேலை பார்த்து வருபவர்களை கல்வி யதிகாரிகள் (D. E. O), கல்வித் துணையதிகாரிகள் (Deputy

(45-ம் பக்கம் பார்க்க)

THE MADRAS STATE

AIDED ELEMENTARY SCHOOL

# Managers' & Teacher Managers'

# Second Conference

## 19-11-55 (VELLORE)

Dr. P. VARADARAJALU NAIDU, M. L. A.

(President)

## THE RESOLUTIONS PASSED

1. This Conference strongly protests against the G. O. Ms. No. 1546 Education dated 14-9-55 as it is in contravention of the assurance given by the Government in para 6 of the G. O. No. 926 dated 19th May, 1955, that the fee income lost by the Managements of Elementary and Secondary schools will be made good to them in full.

2. This Conference views with alarm the implication contained in para 3 of the G. O. No. 1546 which seeks to pay the compensation in respect of all concessions including the Harijan concession and N. G. O. concession at the new rates contained in para I of the said G. O.

It is against all principles of equity and justice for the Government to implement the G. O. 1546 for the year 1955-56 as the managements have made the concessions for the year in full faith that full fee compensation will be given to schools at the actual rates charged by the Schools.

3. This conference regretfully points out to the Government that it will be impossible for the Managements of schools to continue to run the schools, unless

the Government immediately cancels the following new rates in the G.O. 1546 so as to pay the full fee compensation in respect of all concessions.

NEW RATES OF FEES AS PER G. O. 1546 EDUCATION DATED 14-9-1955.

| | *Non Municipal* | | | *Municipal* | | | *Madras City* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Rs. | A. | P. | Rs. | A. | P. | Rs. | A. | P. |
| Standard 1 | 0 | 2 | 0 | 0 | 3 | 0 | 0 | 4 | 0 |
| „ 2 | 0 | 3 | 0 | 0 | 4 | 0 | 0 | 6 | 0 |
| „ 3 | 0 | 4 | 0 | 0 | 5 | 0 | 0 | 8 | 0 |
| „ 4 | 0 | 5 | 0 | 0 | 6 | 0 | 0 | 10 | 0 |
| „ 5 | 0 | 7 | 0 | 0 | 8 | 0 | 0 | 12 | 0 |
| „ 6 | 0 | 12 | 0 | 0 | 14 | 0 | 1 | 2 | 0 |
| „ 7 | 1 | 0 | 0 | 1 | 2 | 0 | 1 | 6 | 0 |
| „ 8 | 1 | 2 | 0 | 1 | 4 | 0 | 1 | 8 | 0 |

In respect of old schools functioning before 19th May, 1955 the rate of compensation will be at the average of the last three years rates of school fees charged by them, irrespective of the areas city, municipal or non-municipal-where the schools are located.

In respect of schools opened after 19th May 1955, the rate of compensation in respect of all concessions will be on the basis of the average rates of school fees obtaining in the old schools in the locality where the new schools have been opened.

4. This Conference sees no reason for the Government to interfere with the discretion of the managements of the schools in the matter of special fees.

In respect of the number of instalments of fee collections, this Conference points out that the practice obtaining in schools at present may be allowed to continue.

5. This conference requests the Hon'ble Ministers an Members of the Assembly and of the Council that

they may kindly take immediate steps to pay the full fee compensation to the Aided fee levying Elementary Schools in the state to meet out the monthly essential expenditures of the schools such as rent to school building, excess salary to teachers, Managers 'P. F. contribution, managers' conveyance charges, purchase of handicraft materials, cost of stationery, pay to clerks, pay to conductresses, sweepers and scavengers etc., in view of the fact that they have not collected fees for the last 6 months. From June 1955 as per G. O. No. 926 Education dated 19—5—1955, wherein it has been stipulated that full fee concessions will be granted to *children whose parents' annual income is less than* Rs. 1200/-and The compensation for loss of fee income on account of free education and concessions for children of N. G. Os, Harijans and poor girls may kindly be sanctioned every month.

6. That an advance of 50 per cent of the amount of loss of fee income, the compensation for children of N.G.Os, Harijans and poor girls collected for the calendar year 1954 as per the financial statement of each school, may kindly be granted immediately as an interim relief to help the Private managements, and this advance may be recovered in instalments within the month of May of the school-year 1955-56.

7. This conference wishes to draw the attention of the Government to G. O. No. 2740 Education dated 30-8-1949 wherein the Government directs that full fee concessions be granted to Harijan pupils in elementary and higher elementary schools under private managements for a period of ten years from 1949-50 and that therefore the above G. O. is to be in force till the end of the said period without any adverse effect.

8. This conference draws the attention of the Government that according to the recent Dr. Alagappa's elementary education committee's report there are about 63 lakhs of children of school-going age, in this state, that only 32 lakhs are under School instruction and the

remaining 31 lakhs are yet to be brought under instruction and that it is the duty of the popular government to provide elementary education for these 31 lakhs of children at an early date and to encourage the private agencies also to open as many schools as they can.

9. That the offices of the Divisional Inspectors in the state may be abolished and that clerical staff in the above offices may be distributed in the offices of the District Educational officers and of the Deputy Inspectors of schools and more clerks may be appointed in these offices in view of the increased heavy work; to disburse quickly, all concessions for Aided Ely., Schools in the state.

10. This conference strongly recommends that in the place of Regional councils proposed by the Alagappa committee, Dt., Educational councils be constituted more or less on the lines of the old Dt., Educational council prior 1938, but with wider and more effective powers so as to make Ele., Education both compulsory and free through out the state.

In a democratic state like India the parties in power are likely to interfere often in the administration of ele., schools and that as a result, it would not be deemed fit if the government should interfere with party principals in the cause of education as openly stated recently by the governor of Madras and therefore this conference resolves that the Elementary Education Act be amended and independent Educational councils are set up for every district consisting of following non-official members with powers to recognise and aid ele., schools.

4 Members to be elected by the District Board
2 „ „ Panchayat Boards
2 „ „ Municipal Councils
2 „ „ Association of Dt. Teacher-Managers

3 Members to be elected by the Managers of Private Aided Ele. Schools
2 „ „ Association of teachers of elmentary Schools
2 „ „ Catholic Missionaries
2 „ „ Protestant Missionaries
4 „ to be nominated by the Government.

11. This conference views with great regret that Dr. Alagappa Chettiar's report directs that every private Aided Management should form within a specified period a registered committee and wishes to express that this attitude of the report is really very drastic in its conception and highly revolting to the spirits and sentiments of the managements and that the progress of Elementary Education will greatly be impeded if not frustrated and it is very unjust and unfair that all the long and meritorious services rendered by the Aided Managements in the cause of Elementary Education since long before even the Government thought of promoting Elementary Education, should far from being so mercilessly ignored be encouraged and their continued co-operation solicited.

12. This conference brings to the notice of the Government that the free Schools in the state hardly get 15 per cent maintenance grant and it resolves to request the Government that a maximum of 25 per cent maintenance grant may kindly be granted to the 9000 free rural schools in the state for the purpose of meeting out the essential expenditure of these schools such as nominal rent to school buildings, purchase of handicraft meterials, cost of stationery, T. P. F. contribution and contingencies etc.

13. That in view of high cost of living the teaching grant of the teachers may be fixed immediately at the following rates as basic pay with the usual increments.

| | Trained | Untrained |
|---|---|---|
| Secondary Grade | Rs. 70/- | Rs. 50/- |
| Higher Grade | Rs. 50/- | Rs. 35/- |
| Lower Grade | Rs. 30/- | |
| Prevocational Instructor | Rs. 50/- | Rs. 35/- |
| Needle work Instructor | Rs. 50/- | Rs. 35/- |

14. That a Common Examination be held for VIII Standard of higher elementary schools and for the III Form of high schools based on the same syllabus of studies, in view of the introduction of free education or E. S. L. C. Examination be totaly abolished.

15. That permission may be granted to appoint substitutes in place of a non-basic trained teacher when he is sent up for basic training and that grant may be assessed to the said substitute also.

16. That this Conference again draws the attention of the Government to G. O. No. 926 Education dated 19th May 1955, wherein it is clearly stated that full fee concessions will be granted to children, whose parents' annual income is less than Rs 1200 and as such the Government is bound to grant full fee concessions according to the rate prevailing in June 1955 and that this conference requests that suitable assurances be given by the Government to that effect within fifteen days.

17. This conference authorises the action Cammittee to take necessary measures for establishing their right if no assurances are forth coming as resolved above.

18. This Conference appoints an action committee consisting of thefollowing members with powers to co-opt to take immediate neoessary steps by a deputation with Government, D. P. I. or through Legislature etc., to cancel the G. O. No. 1546 dated 14-9-55 and see that the Government stand by the G. O. No. 926 dated 19-5-55 promising loss of fee income in full to all Aided Elementary Schools.

## COMMITTEE MEMBERS

1. Sri P. VEERARAGHAVAN, (Editor, "Ele., Education.")
2. „ A. R. SESHACHALAM, (Provincial Secretary.)
3. „ A. K. S. SARMA, (Editor "Athara Kalvi.")
4. „ N. A. NATESA MUDALIAR, (Dt., Secretary.)
5. „ V. SUNDARA MOORTHI CHETTIAR, (City Councillor.)
6. „ S. RAMANUJAYYA, (Chairman, Reception Committee, N. Arcot.)
7. „ T. N. SUNDARARAJULU NAIDU, (Trichy.)
8. „ T. K. RANGANATHAN, (S. Arcot.)
9. „ H. DEVADOSS (Tinnanur), Chingleput.
10. „ S. K. NATARAJAN, (Salem.)
11. „ A. PASUPATHY APPA, (Coimbatore.)
12. „ J. D. ASIRVATHAM, (Madura.)
13. „ N. S. NARAYANASAMY, (Tanjore.)
14. „ K. D. S. V. PRAKASAM, (Ramnad.)
15. „ P. D. GNANARAJ, (Tinnevelly.)
16. „ I. J. HALAYA, (Nilgiris.)

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

8. உலகில் 1 கோடியே 20 லட்சம் குருடர்கள் இருக்கிறார்களாம். அதில் இந்தியாவில் மட்டும் 20 லட்சம் குருடர்கள் இருக்கிறார்களாம்.

9. தமிழ் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்று. அப்படியானால் முழு வைத்தியன் ஆகவேண்டுமானால் இரண்டாயிரம் பேரையாவதும் கொல்லவேண்டுமென்று அர்த்தம் ஆகிறது அல்லவா? ஆனால் உண்மை அதுவல்ல. விளக்கம் தருகிறேன். புரியும் பாருங்கள். பச்சிலை மூலிகை, வேர் முதலியவற்றைக் கொண்டு வைத்தியம் செய்யும் முறை தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. நாட்டு வைத்தியர்களிடம் பலவித இலைகள் இருக்கும். சில மருந்துகளுக்கு வேரை உபயோகிப்பார்கள். ஆகவே, காடு, மலையெல்லாம் சுற்றி பலவித வேர்களைக் கொண்டு வருவார்கள். அப்படிக் கஷ்டப்பட்டு எவனொருவன், "ஆயிரம் வேர்களைக் கொண்டவனாக இருக்கின்றானோ அவன் அரை வைத்தியனாவான்" என்றார்கள். நாளடைவில் இந்தப் பழமொழி, "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்று மாறிவிட்டது. கொண்டவன் என்ற சொல் கொன்றவனாகவும், வேரை என்பது பேரை என்றும் திரிந்துவிட்டது.

10. "சோடியம்" என்பது உடலில் பட்டால் புண்ணாகி விடும். நீரில் வெடிக்கும் "க்ளோரைன்" என்பது பசுமை கலந்த மஞ்சள் நிறமான காற்று (ஆவி). இந்த ஆவியைப் போர்க்களத்தில் விட்டால் அவ்வளவும் பிணமலையாகிவிடும். காற்றிலெல்லாம் கொடிய விஷத் தன்மை வாய்ந்தது. ஆனால்! இதன் மகிமைதான் என்ன! "சோடியம்—க்ளோரைன்"—இரண்டும் சேர்ந்து உப்பாக மாறுகிறது. உப்பில்லாத பண்டமுண்டோ! "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பதோர் பழைய மொழி அன்றோ!

(36–ம் பக்கத் தொடர்ச்சி)

Inspectors) அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டால் மிக நலமா யிருக்குமென்று இம்மாநாடு கருதுகிறது.

12. இந்தியா போன்ற ஒரு ஜனநாயக ஆட்சியில் அதிகாரத்தி லிருக்கும் கட்சிகள் அடிக்கடி மாறுவது இயற்கையாகையினாலே, கல்வித் துறையிலே, கட்சி மனப்பான்மை தலையிடக் கூடாதென்று, இம்மாநில கவர்னர்கூட சமீபத்தில் கூறியிருக்கிறபடியால், ஒவ் வொரு மாவட்டத்திலும் அழகப்ப செட்டியார் கமிட்டி கூறும் (Regional Boards)க்குப் பதிலாகக் கீழ்க்கண்ட குழுவினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கல்விச் சபையை அமைப்பது நலமென இம்மாநாடு யோசனை கூறுகிறது.

| | | |
|---|---|---|
| ஜில்லா போர்டுகளிலிருந்து | தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் | 4 |
| முனிசிபாலிடிகளிலிருந்து | ,, | 2 |
| ஆசிரிய மானேஜர்கள் குழுவிலிருந்து | ,, | 2 |
| தனிப்பட்ட பாடசாலை மானேஜர் குழுவிலிருந்து | ,, | 3 |
| ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் குழுவிலிருந்து | ,, | 2 |
| ரோமன் கத்தோலிக்கப் பள்ளிகளிலிருந்து | ,, | 2 |
| பிராடெஸ்டெண்ட் கிருஸ்துவப் பள்ளிகளிலிருந்து | ,, | 2 |
| அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்கள் | | 4 |

13. திரு. அழகப்பச் செட்டியார் அறிக்கையில் குறிப்பிட்ட காலத்திற்குள் தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு குழு அமைக்கப்பட்டுப் பதிவு செய்யப்படல் வேண்டுமென்று கூறுவது உள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய பாதக மான செயலென்றும், அதனால் பள்ளியின் நலன் சரிவரப் பாதுகாக் கப்படமாட்டாதென்றும், அதற்கு மாறாகக் குழப்பமும் கலகமும் பூசல்களும் தாம் வளருமென்றும் இம்மாநாடு எடுத்துக் காட்ட விரும்புகிறது.

14. கிழக்கிந்திய கம்பெனி காலத்தில் இருந்த தனிப்பட்ட நபர்கள் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்காகப் பெரும் பாடு பட்ட வர்களென்றும், அந்த நபர்கள் ஆற்றிய அரும்பணிகள் சிறந்தவை என்றும் பின்வந்த அரசாட்சிகளும் முழு மனதோடு உவந்து, உதவி, பாராட்டி இருக்கின்ற காரணத்தினாலே அத்தகைய நபர்களின் முயற்சியிலே கல்விக் கமிட்டி நிறுவுதல் போன்ற முட்டுக் கட்டை கள் போட்டு, ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு இடையூறு விளை விக்கக் கூடாதென்றும், அவர்கள் முன்போலவே தல்வித் துறையில் தொண்டாற்ற வாய்ப்புகள் நல்கவேண்டுமென்றும் இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

15. இம்மாநிலத்திலுள்ள 9000 தனிப்பட்ட இலவசப் பள்ளிகள் அரசாங்கமளிக்கும் 15 சதவிகித நிர்வாக மான்யம் பெற்றும் சரிவர நடைபெற முடியவில்லை என்ற காரணத்தினால், அவர்கள் கட்டிடங்களின் வாடகைகள், கைத்தொழில் பண்டங்களின் விலை, காகிதம் பென்சில் மை முதலியவற்றின் கிரயம், பிராவிடன்டு பண்டின் நிர்வாகஸ்தரது, பங்கு, குமாஸ்தாக்களின் சம்பளம், சில்லறைச் செலவுகள் முதலியவற்றைச் சரிவரச் சந்திக்க 25 சதவிகிதம் நிர்வாக மான்யம் அளிக்கப்படல் வேண்டுமென்று இம்மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது.

16. தற்காலம் குடும்ப வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்திருப்பதன் காரணமாக ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள், 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி உடனடியாக உயர்வாக வழக்கமான விகித வருட உயர்வு குறிப்பிட்டு) கீழ்க்கண்டவாறு ஆதாரச் சம்பளம் நிச்சயிக்கப்படல் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.

| | ஆசிரியப் பயிற்சி பெற்றவர் | ஆசிரியப் பயிற்சி பெறாதவர் |
|---|---|---|
| செகண்டரி கிரேடு | ரூ. 70 | ரூ. 50 |
| ஹையர் கிரேடு | ரூ. 50 | ரூ. 35 |
| லோயர் கிரேடு | ரூ. 30 | |
| கைத்தொழிலாசிரியர் | ரூ. 50 | ரூ. 35 |
| தையல் வேலையாசிரியர் | ரூ. 50 | ரூ. 35 |

17. உயர்தர ஆரம்பப் பாடசாலையில் 1 முதல் 8-ம் வகுப்பு வரையிலும், உயர்நிலைப் பள்ளிகளில் 3-ம் படிவம் வரையிலும் பிள்ளைகள் அனைவரும் இலவசமாகக் கல்வி பயிற்றப்பட வேண்டுமென்று அரசாங்கம் கருதுவதனால், உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் 8-ம் வகுப்பு வரை பாடத்திட்டங்களை ஒரே மாதிரியாக அமைத்து, 8-ம் வகுப்பிற்கும், 3-ம் படிவத்திற்கும் ஒரே பொதுப் பரீட்சை நடத்தவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

18. ஆதாரக் கல்வித் திட்டப் பயிற்சிக்கு ஓராசிரியரையனுப்பப்பட்டால் அவருக்குப் பதிலாக வேறொருவரை வேலையிலமர்த்திக்கொள்ள உத்தரவு கொடுக்குமாறும், அவருக்கும் சம்பள மான்யம் கணக்கிடப் படல் வேண்டுமென்றும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

19. வருட வருமானம் ரூ. 1200 க்குக் குறைந்த பெற்றோர்களின் மக்களுக்கு முழுச் சம்பளச் சலுகையின் நஷ்டஈடு தரப்படு

மென்று 19–5–55–ல் வெளியிடப்பட்ட G. O. No. 926 Ed–ல் திட்டவட்டமாகக் கூறியிருப்பதனால், 1955–ம் வருடம் ஜூன் மாதம் பள்ளிகளில் வசூலிக்கப்பட்ட விகிதப்படி அரசாங்கம் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறது என்றும், அதன்படி அவர்கள் முழு நஷ்ட ஈட்டையும் கொடுக்க வேண்டுமென்றும், அப்படிக் கொடுக்கத் தவறினால், அந்நஷ்டத்திற்கு நிவர்த்தி கோருவான் வேண்டி, நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுமென்றும், இன்றையிலிருந்து 15 நாளைக்குள் அரசாங்கம் இதற்கு ஒரு பதில் அனுப்ப வேண்டுமென்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

20. அரசாங்கம் மேற்படிக் குறைகளை நிவர்த்திக்க, அதாவது முழுச் சம்பள நஷ்டஈடு கொடுத்துதவ மறுக்குமானால், அதற்கு எதிராகத் தொடரப்பட வேண்டிய வழக்கிற்குச் சம்பள வசூல் செய்யும் தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படும் எல்லாப் பள்ளி மானேஜர்களும் தங்கள் தங்களாலியன்ற அளவு கோர்ட்டுச் செலவுக்குச் சத்தியானுசாரம் உதவ வேண்டுமென்டுமென்று இம்மாநாடு கோருகிறது.

டைரக்டர் அவர்களையும், மந்திரி மார்களையும் நேரில் சந்தித்தோ, அல்லது சட்டசபை அங்கத்தினர்கள் மூலமாகவோ, அரசாங்கம் விடுத்துள்ள ஜி. ஓ. நெம்பர் 1546 உத்தரவை ரத்து செய்ய, அதற்கான இதர தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் அடங்கிய செயற்குழு (Action–Committee) ஒன்றை இம்மாநாடு நியமனம் செய்கிறது.

இக்குழுவிற்கு சந்தர்ப்பம் போல் இன்னும் சில அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்ளவும் இதர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவும் இம்மாநாடு முழு அதிகாரத்தையும் கொடுக்கிறது.

## செயற்குழு அங்கத்தினர்கள்

1. திரு P. வீரராகவன்
   (ஆசிரியர் "ஆரம்பக்கல்வி" சென்னை.)

2. ,, A. K. S. சர்மா
   (ஆசிரியர் "ஆதாரக்கல்வி" சென்னை.)

3. ,, A. R. சேஷாசலம்
   (மாகாண பொதுக் காரியதரிசி சென்னை.)

4. ,, N. A. நடேச முதலியார்
(ஜில்லாக் காரியதரிசி சென்னை)

5. ,, V. சுந்தரமூர்த்தி செட்டியார்
(நகராண்மைக் கழக உறுப்பினர் சென்னை)

6. ,, S. இராமானுஜய்யா
(மாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர் வேலூர், வடாற்காடு)

7. ,, T. K. அரங்கநாதன்
(நெல்லிக்குப்பம், தென்னாற்காடு)

8. ,, H. தேவதாஸ், (தின்னனூர், செங்கல்பட்டு)

9. ,, S. K. நடராஜன், (சேலம்)

10. ,, A. பசுபதியப்பா, (கோவை)

11. ,, J. D. ஆசீர்வாதம், (மதுரை)

12. ,, T. N. சுந்தரராசுலு நாயுடு, (திருச்சி)

13. ,, N. S. நாராயணசாமி, (தஞ்சை)

14. ,, K. D. S. V. பிரகாசம்,
(விருதுநகர், இராமநாதபுரம்)

15 ,, P. D. ஞானராஜ், (திருநெல்வேலி)

16 ,, I. J. ஹாலேய்யா, (நீலகிரி)

**
*

# சென்னை மாநில எயிடெட்

# மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்கள்

# 2-வது மாநாடு

**19—11—55**

**டாக்டர் பி. வரதராசலு நாயுடு, M. L. A.**

அவர்கள் நிகழ்த்திய

# தலைமையுரை

பண்பு கெழுமிய மானேஜர்களே ! கல்வித் துறையில் நீண்ட காலமாக அருந்தொண்டு ஆற்றி வரும் அன்புள்ள நண்பர்களே !

உங்களுடைய மாநில மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பேறு மறுபடியும் ஓர் முறை எனக்குக் கிடைத்ததைப்பற்றி நான் மிகமிக மகிழ்ச்சியடைகிறேன். சில மாதங்களுக்கு முன்னால் சென்னை நகரில் நடைபெற்ற உங்களுடைய மாநாட்டிற்கு என்னைத் தலைமை தாங்க அழைத்தீர்கள். இந்த முறையும் என்னிடமே தலைமைப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறீர்கள். இதற்கெல்லாம் காரணம், என்னிடம் உங்களுக்குள்ள பற்றும் பாசமுமே என்று எண்ணுகிறேன். என்மீது இத்துணை நம்பிக்கையும் அன்பும் கொண்டிருப்பதற்காக உங்களுக்கு என்னுடைய மனம் நிறைந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் உங்களுடைய உள்ளங்களிலே பற்பல நெருக்கடியான பிரச்சினைகள் அலைமோதிக் கொண்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். சென்ற ஆறுமாத காலமாக நஷ்ட ஈடு வரவில்லையே என்கிற வருத்தம் ஓர் புறம். நியாயமான அளவு நஷ்ட ஈட்டிற்கு ஏற்பாடு செய்யாமல் மிகக் குறைந்த அளவு நஷ்ட ஈடுதான் தரமுடியும் என்று கல்வி இலாகாவின் செப்டம்பர் மாத உத்தரவு ஒன்று தெரிவிக்கிறதே என்கிற வேதனை ஓர் புறம். இந்த அளவு நஷ்ட ஈடு கூடத் தேவையில்லை என்று அழகப்பா கமிட்டியின் அறிக்கை அறிவிக்கிறதே என்கிற கோபம் மற்றோர்

புறம். எபிடட நாவாங்கள், இந்த நாட்டில், எல்லாராலும் பாராட் டப்படக்கூடிய அளவில், மிகச் சிறந்த பணியாற்றியிருந்துங்கூட, அந்தச் சிறப்பைப் பாராட்டி அழகப்பா கமிட்டியினர் சில வார்த்தை கள்கூடக் கூறவில்லையே என்கிற துயரம் வேருேர் புறம். இவ் வாருன பற்பல எண்ணப் புயல்கள் உங்களுடைய நெஞ்சமெனும் வானத்தில் வீசிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் நன்ருக அறி வேன். உங்களுடைய பிரச்சினைகளை—அந்தப் பிரச்சினைகளில் உள்ள நியாயத்தை—அந்த நியாயத்தை ஒப்புக்கொண்டு தீரவேண் டிய அவசியத்தை அரசாங்கத்திற்கு விளக்கமாக எடுத்துச் சொல் கிற கடமையை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுக்காக நான் என்னுலியன்ற எல்லா வகை உதவிகளையும் புரிய எப்போதும் தயா ராக இருக்கிறேன். கல்விப் பொருளை அள்ளி வழங்கும் அரிய பணியில் ஈடுபட்டுள்ள உங்களுடைய துயரங்களைப் போக்குவது கல்வி உலகத்தின் துயரங்களையே போக்குவதாகும் என்பது என்னுடைய கருத்து.

முதலமைச்சர் கனம் காமராஜர் ஆரம்பக் கல்வியின் முன்னேற் றத்தில் மிகுந்த ஆர்வமும் பற்றுதலும் கொண்டிருக்கிருர் என்பது நீங்கள் அறிந்ததே. இந்த மாகாணத்தில் உள்ள எல்லாச் சிறுவர் சிறுமியரும் கல்வி கற்பதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்தாகவேண்டியது தன்னுடைய கடமை என்று அவர் கருது கிருர். கல்வி மிக விரைவில் பரவவேண்டும் என்பதற்காகவே, எட்டாவது வகுப்பு வரையில், ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் இலவசக் கல்வி என்கிற உத்தரவையும் அவர் பிறப்பித்தார். 4—5—6-வது படிவங்களிலும் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை அளிக்க இயலுமா என்பதை அவர் தீவிரமாக ஆராய்ந்து வருகிருர். ஆரம்பப் பள்ளிகளிற் பயிலும் ஏழைப் பிள்ளைகளுக்கு நடுப் பகல் உணவை இலவசமாக அளிக்க வேண்டுமென்பது அவ ருடைய பேராவல். ஏதாவது புதிய வரிகளைப் போட்டாவது இந்த நற்செயலைச் செய்தாக வேண்டுமென்று அவர் கருதுகிருர்.

எட்டாவது வகுப்பு வரையில் இலவசக் கல்வி என்கிற ஏற் பாடு, கனம் காமராஜரின் ஆட்சியால் நாட்டுக்கு ஏற்பட்ட மிகச் சிறந்த நன்மைகளில் ஒன்று என்பதை எவரும் மறுத்து விடமுடி யாது. பணம் செலவழித்துப் படிக்க முடியாத நிலையிலிருக்கிற ஏழைப் பிள்ளைகளெல்லாம் இனி விரைவில் படித்து முன்னேற இந்த ஏற்பாடு சிறந்ததோர் வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

கனம் காமராஜரால் கொண்டு வரப்பட்ட இவ்வளவு சிறந்த ஏற் பாட்டால் உங்களுக்குச் சில சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ருல் அதற்குக் காரணம் கல்வி இலாகாவின் நடைமுறையே

என்று நான் கருதுகிறேன். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு பிற்போக்கான முறையில் நடந்து வந்ததோ அதே முறையில்தான் கல்வி இலாகா இன்னமும் நடந்துவருகிறது. நாட்டிற்கு விடுதலை கிடைத்து நல்லதோர் வாழ்வு ஏற்பட்டுங்கூட நமது மாநிலத்தின் கல்வி இலாகாவில் எத்தகைய மாறுதலையும் காணமுடியவில்லை. ஒரு புதிய உற்சாகம்—ஒரு வரவேற்கத்தக்க மாறுதல்—ஒரு பாராட்டத் தக்க புதுமுறை—சுதந்தர சகாப்தத்திற்கு ஏற்ற சுறுசுறுப்பான நடைமுறை—எதையுமே நம் கல்வி இலாகாவில் காணமுடியவில்லை.

எனக்குக்கூட மனவருத்தமாகத்தான் இருக்கிறது. ஆறுமாத காலமாக நஷ்ட ஈடு அளிக்கப்படாமலிருந்தால், எயிடட் நிர்வாகிகள், தங்களுடைய பள்ளிக்கூடங்களை எப்படித்தான் நடத்திச் செல்ல முடியும்? மாதாமாதம் செய்து தீரவேண்டிய செலவுகளை அவர்கள் எப்படிச் செய்துவர முடியும்? இலவசக் கல்வி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது மே மாதத்தில், இப்போது நடப்பதோ நவம்பர் மாதம். இடையே சென்று மறைந்தவை ஆறுமாதங்கள். நஷ்ட ஈட்டை அளிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யாமல் கல்வி இலாகா ஏன் இவ்வளவு காலமாக உறங்கிக் கிடக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

நஷ்ட ஈடு இன்னமும் வரவில்லை என்பது மட்டுமல்ல. மிகக் குறைந்த ஒரு விகிதத்தைக் காட்டி, இந்த விகிதத்தின்படிதான் இனி நஷ்ட ஈடு அளிக்கப்படும் என்பதாக, இந்தக் கல்வி இலாகா, செப்டம்பர் மாதத்தில் ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. கல்வி இலாகா குறிப்பிட்டுள்ள இந்த விகிதங்கள் மிக மிகக் குறைவு என்பதே என்னுடைய அழுத்தந்திருத்தமான கருத்து. எயிடட் பள்ளிகள் சிறப்பான முறையில் நடைபெற வேண்டுமானால் நியாயமான அளவு நஷ்ட ஈட்டை அவர்களுக்குத் தந்தேயாகவேண்டும்.

அண்மையில் வெளி வந்துள்ள அழகப்பா கமிட்டியின் அறிக்கை, இந்தத் துறையில் மிகவும் தவறான ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறது. எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் அரசாங்கம் ஓராண்டுக் கால நோட்டீஸ் கொடுத்துவிடவேண்டுமென்றும், அதன் பிறகு எந்த ஆரம்பப் பள்ளியும் எந்த மாணவனிடமிருந்தும் கட்டணம் வசூலிக்கக்கூடாதென்றும், அதுபோலவே, எந்த ஆரம்பப் பள்ளியும் அரசாங்கத்திடமிருந்து நஷ்ட ஈடு கேட்கக்கூடாதென்றும் அழகப்பா கமிட்டி தெரிவித்திருக்கிறது.

இந்த யோசனை முற்றிலும் தவறானது மட்டுமல்ல, நடைமுறைக்குக் கொண்டுவர இயலாததும் ஆகும். சம்பளமும் வாங்கக் கூடாது—நஷ்ட ஈடும் கேட்கக்கூடாது என்றால்; நகரப் பகுதி

களில் உள்ள பள்ளிக்கூடங்களை, அதன் நிர்வாகிகள் எப்படி நடத்த முடியும்? கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிட வாடகை முதலிய செலவுகள் மிகக் குறைவாக இருப்பதால், அவற்றின் நிர்வாகிகள், அரசாங்கம் அளித்து வருகிற நிர்வாகக் கிராண்டை (Maintenance grant) மட்டுமே வைத்துக் கொண்டு, நஷ்ட ஈடு இல்லாமலே, தங்கள் பள்ளிகளை நடத்தமுடியும். ஆனால் நகரப் பகுதிகளில் மிக அதிகமான வாடகை தரவேண்டியிருப்பதாலும், வேலைக்காரிகள்—ஆயாக்கள்—தோட்டிகள் முதலியவர்கட்குக் கணிசமான சம்பளம் தரவேண்டியிருப்பதாலும், நஷ்ட ஈடு இல்லாமல் பள்ளிகளை நடத்துவது இயலாத செயலேயாகும்.

ஒவ்வோர் எயிடட் பள்ளிக்கூடத்திற்கும் பதிவு செய்யப்பட்ட ஒரு நிர்வாகக் கமிட்டி ஏற்படுத்தப்பட வேண்டுமென்பது அழகப்பா கமிட்டியின் மற்றோர் யோசனை. இந்த நிர்வாகக் கமிட்டியில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஒருவர் அல்லது இருவர் இருக்க வேண்டுமென்றும், இந்தக் கமிட்டி ஏற்பட்டுவிட்ட பிறகு, பள்ளிக்கூட நிர்வாகம் இந்தக் கமிட்டியின் பொறுப்பிலேயே இருக்க வேண்டுமென்றும் அழகப்பா குழுவினர் தெரிவித்திருக்கின்றனர். இல்லாத ஊருக்குப் போகாத பாதையைப் புரியாத மனிதனிடம் தெரியாத மொழியில் கேட்கிற விளங்காத கதையாக இந்த விசித்திர யோசனை இருக்கிறதே தவிர, இவ்வாறு அமைக்கப்படுகிற நிர்வாகக் கமிட்டிகளால் உருப்படியான நன்மை ஏற்படமுடியுமென்று நான் கருத முடியவில்லை.

தனிப்பட்ட நிர்வாகங்களின்கீழ் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஒவ்வோர் மாணவன்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படுகிறது. அளிக்கப்படுகிற கல்வியின் தரமும் உயர்ந்ததாக இருக்கிறது. நகரசபை அல்லது அரசாங்கத்தால் நடத்தப்படும் பள்ளிகளில் இத்தகைய உயர்ந்ததரம் இருப்பதில்லை. இந்தக் காரணத்தால்தான், நகரசபைப் பள்ளிகளில் கல்வி இலவசம் என்றாலுங்கூட, பல பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை அங்கே அனுப்பாமல், தனிப்பட்ட பள்ளிகளில் கட்டணம் உண்டு என்றாலுங்கூட, தங்கள் பிள்ளைகளை அங்கேதான் அனுப்புகின்றனர். தனிப்பட்ட நிர்வாகங்களின்கீழ் உள்ள பள்ளிக்கூடங்கள் இத்துணைச் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற்று வரும்போது, அந்தப் பள்ளிக்கூடங்களில், இல்லாத ஒரு குழப்பத்தை எதற்காகப் புதிதாக உண்டாக்க வேண்டும்? அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு நிர்வாகக் கமிட்டி என்கிற ஏற்பாடு எதற்காக?

நிர்வாகக் கமிட்டி என்கிற ஓர் அமைப்பு ஏற்பட்டுவிட்டால், அந்தக் குழுவின் உறுப்பினர்களுக்கும் பள்ளிக்கூட நிர்வாகிக்கு மிடையே ஓயாத பூசலும் பிணக்கும் தானே ஏற்படும்? ஓர் எயிடட் பள்ளிக்கூட நிர்வாகிக்குத் தன் பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்தில் இருக்கக்கூடிய அளவு அக்கறை ஒரு நிர்வாகக் கமிட்டிக்கு இருக்க முடியாது. ஏனென்றால், ஓர் எயிடட் நிர்வாகிக்கு, அவருடைய பள்ளிக்கூடமே உயிர், உடமை, வாழ்க்கை—எல்லாம். ஆனால் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களுக்கோ, அது ஓர் ஓய்வு நேர உல்லாசப் பணி.

பஞ்சாயத்து போர்டுகள், ஜில்லா போர்டுகள் ஆகியவற்றின் ஆதிக்கத்தில் உள்ள பள்ளிகளை, வட்டாரக் குழுக்கள் (Regional boards) என்கிற புதிய அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது, அழகப்பா குழுவின் மற்றோர் யோசனை. இந்த வட்டாரக் குழுக்கள் ஒவ்வொன்றிலும், பஞ்சாயத்துப் போர்டின் பிரதிநிதிகள் மூவரும், ஜில்லா போர்டின் பிரதிநிதிகள் நால்வரும், அரசாங்கத்தால் நியமிக்கப்படுபவர்கள் இருவரும் ஆக ஒன்பது பேர் இருத்தல் வேண்டும் என்றும் அழகப்பா குழுவினர் அறிவித்துள்ளனர்.

பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டுகளால் ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்படுவதற்கும், அந்தப் போர்டுகளாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரதிநிதிகளால் ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்படுவதற்குமிடையே என்ன வேறுபாடு இருக்க முடியும்? பழைய கந்தன் புதிய உருவில் என்பதைத் தவிர, வட்டாரக் குழுக்களின் அமைப்பால் கல்வியின் தரமோ பள்ளிக்கூடங்களின் தரமோ சிறிதளவும் உயரமாட்டா என்பதே என்னுடைய முடிவு.

ஆரம்பப் பள்ளிகளில் மதக் கல்விக்கு இடம் இருத்தலாகாது என்று அழகப்பா குழுவினர் அறிவித்திருக்கின்றனர். இதனை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். குறைந்தது 18 வயதாவது நிரம்பாத மாணவர்களுக்கு மதக் கல்வியை அளிப்பது சிறிதும் முறையல்ல என்பது பல கல்வி நிபுணர்களின் முடிவு. பல்வேறு மதங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிற் படிக்கிறார்கள். எந்த ஒரு மதத்தைப் பற்றிய கல்வியைப் புகட்டினாலும் ஏனைய மதத்தவர்களின் உள்ளம் புண்படும். எந்த மதத்தையும் சேராத மதக் கல்வி என்பதாத ஒன்று இருப்பது இயலாது. எல்லா மதங்களிலும் பொதுவாக இருக்கிற நன்னெறிகளை—ஒழுக்க முறைகளை மட்டும் போதித்தாலென்ன என்று சிலர் கேட்கின்றனர். அப்படிப்பட்ட நன்னெறிகளைப் போதிக்கத்தான் வேண்டும். ஆனால் அத்தகு நன்னெறிகளைப் பயிற்றுவிக்கும்

கல்விக்கு ஒழுக்கக் கல்வி என்கிற பெயர்தான் பொருந்துமே தவிர மதக் கல்வி என்கிற பெயர் எப்படிப் பொருந்தும்? பொய்யுரை புகலாதே—பிறர்மீது புறங்கூறாதே—எல்லோரையும் நேசி—அனைவரும் ஒரே குலம்—ஏழைகளுக்கு உதவு—எளியவர்க்குந் தீங்கு இழைக்காதே—எவரிடமும் பகை கொள்ளாதே என்பன போன்ற ஒழுக்க நெறிகளைப் புகட்டும் பயிற்சிக்கு ஒழுக்கக் கல்வி என்கிற பெயர்தானே பொருத்தம்?

6, 7, 8 ஆகிய வகுப்புகளில் ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்கவேண்டுமென்று அழகப்பா குழுவினர் தெரிவித்துள்ளனர். இதுவும் வரவேற்கத்தக்க ஓர் சிபார்சேயாகும். இன்றையதினம் ஆங்கிலமே உலகப் பொது மொழியாக இருந்து வருகிறது. உலகத்தின் எந்தப் பகுதியோடு தொடர்பு கொள்வதற்கும் ஆங்கிலப் பயிற்சியே போதுமானதாக இருக்கிறது. விஞ்ஞானத் துறை பற்றிய புத்தகங்கள் ஆங்கிலத்திலேயே ஏராளமாக இருக்கின்றன. வாழ்க்கையை வளமும் வசீகரமும் உள்ளதாக மாற்றக் கூடிய மருத்துவம், பொறி இயல், மின்சாரம், அணு சக்தி, முதலிய எண்ணற்ற துறைகளைப் பற்றிய அறிவுக்குவியலும் இன்றைய நிலையில் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. எனவேதான், ஆங்கிலப் பயிற்சி, நம் மக்கள் அனைவருக்கும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் மதக் கல்வி கூடாது—6, 7, 8 வகுப்புகளில் ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்கவேண்டும்—ஆகிய இந்த இரண்டு சிபார்சுகளைத் தவிர, அழகப்பா குழுவின் அறிக்கையில், வரவேற்கத்தக்க சிறந்த பகுதி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த மாகாணத்தின் ஆரம்பக் கல்வி சிறந்த முறையில் வளரவேண்டுமானால் அழகப்பா குழுவின் அறிக்கையின் மிகப் பெரும் பகுதி உடனடியாக ஒதுக்கித் தள்ளப்படவேண்டும்.

கல்வியின் தரம் உயரவேண்டுமானால், அந்தக் கல்வியைப் புகட்டி வருகிற ஆசிரியர்களின் நிலை உயரவேண்டும். சமுதாயத்தின் தலை சிறந்த அறிவாளிகளே ஆசிரியத் தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லத்தக்க நிலை நாட்டில் உருவாக வேண்டும். நிலைமை இந்த வகையாக மாறவேண்டுமானால், ஆசிரியத் தொழில், மதிப்பு மிக்கதாகவும், எல்லோராலும் விரும்பப் படுவதாகவும், செல்வாக்கு நிறைந்ததாகவும் ஆக்கப்பட வேண்டும். கண்ணியமான ஊதியமும், போதுமான செல்வாக்கும் படைத்ததாக ஆசிரியத் தொழில் மாற்றப் பட்டால்தான் திறமை மிகுந்தவர்கள் அந்தத் தொழிலுக்கு வருவர். கல்வியின் தரமும் அப்போதுதான் உயரும். விரைவில் அரசாங்கம் இந்தத் துறையிலும் தன் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று

நான் ஆசைப்படுகிறேன். அழகப்பா குழுவினர், ஆசிரியர்களின் ஊதியம் உயர்த்தப்படவேண்டும் என்பதைப்பற்றி ஏதோ பொதுப் படையாக இரண்டோர் வார்த்தைகள் தெரிவித்திருக்கின்றனரே தவிர, குறைந்தது இன்ன அளவாவது ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியம் இருக்கவேண்டுமென்று, திட்டவட்டமாகவும் தெளிவாக வும் தெரிவிக்கவில்லை. அழகப்பா அறிக்கையின், மிகப் பெரிய தவறு இது என்று நான் கருதுகிறேன்.

மிக முக்கியமான மற்றோர் பிரச்சினையையும் அழகப்பா குழு கவனிக்கத்தவறி விட்டது. கல்வித்துறையில் அரசாங்கத்தின் தலையீடு இருத்தலாகாது என்பதே அது. இது ஜனநாயக சகாப்தம். இந்தக் காலத்தில் ஒரே கட்சி என்றென்றும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக் கும் என்று சொல்ல முடியாது. ஒவ்வோர் கட்சிக்கும் ஒவ்வோர் வகையான கல்விக் கொள்கை இருக்கக்கூடும். கல்வித் துறையில் அரசாங்கத்தின் தலையீடு மிக அதிகமாக இருக்குமானால், ஒவ்வோர் கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வருகிறபோதும் ஒவ்வோர் வகையான கல்விக் கொள்கை நிலைநாட்டப்பட்டு, கல்வி உலகம் குழப்பத்திற்கும் நிலையற்ற தன்மைக்குமே ஆளாகிவிடும். கல்வித் துறையில் எத்தகைய மாறுதல் செய்யப்படுவதானாலும், அது, அடிக்கடி மாறக் கூடிய மந்திரிசபைகளால் செய்யப்படுவதைவிட, கல்வித் துறையில் சிறந்த பயிற்சி வாய்ந்த வல்லுநர்களால் செய்யப்படுவதே மிகவும் நல்லதாகும்.

எண்ணிப்பார்த்தால், கல்விப் பிரச்சினைகள் மளமளவென்று கண்முன்னால் தோன்றுகின்றன. அத்தனையையும் இங்கே குறிப் பிடுவது இயலாத செயல். ஒரு சில முக்கியமான பிரச்சினைகளை மட்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

சிந்தித்துப் பாருங்கள்—சிறந்த முடிவுக்கு வாருங்கள். வணக்கம்.

முதுபெருந் தலைவர்

**டாக்டர் P. வரதராசலு நாயுடு, M. L. A.**

அவர்களின் பிறந்த நாள் விழா,
சென்னை ராஜாஜி மண்டபத்தில் 27-11-55 அன்று
மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டபோது
அன்னாருக்கு,

**சென்னை மாநில உதவிபெறும்
மானேஜர்கள்-ஆசிரிய மானேஜர்கள்
சங்கத்தாரால் வாசித்தளிக்கப்பட்ட**

# பாராட்டுத் தாள்

**அஞ்சாத நெஞ்சு படைத்த அறப்போர் அண்ணலே!**

தமிழ் நாட்டின் முதுபெருந் தலைவராகிய தங்களுக்கு இன்று பிறந்த நாள் விழா என்பதறிய நாங்கள் களிபேருவகை அடைகிறோம். எங்களுடைய உள்ளம் இன்பப் பெருவெள்ளத்தில் நீந்தி மகிழ்கிறது. எங்களை அறியாமலே எங்களுடைய நா, வாழ்க—வாழ்க—அரும் பெருந் தலைவர்—ஆற்றல் வீரர்—தமிழ் நாட்டின் தன்னிகரற்ற தியாக சீலர்—டாக்டர் வரதராசலு வாழ்க என்று வாழ்த்துகிறது. தங்களுடைய இந்தப் பிறந்த நாளன்று, தங்களுடைய சென்ற நாற்பதாண்டுக் காலப் பொது வாழ்வை ஒரு முறை நினைத்துப் பார்க்கிறோம். பூரிப்படைகிறோம். மறுபடியும் நினைத்துப் பார்க்கிறோம். மட்டற்ற பெருமை கொள்கிறோம். மீண்டும் எண்ணிப் பார்க்கிறோம். இக்கால இளைஞர்களின்

எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள அற்புதமான கலங்கரை விளக்கு தங்களுடைய கடந்த கால வாழ்க்கை என்பதை ஐயம் திரிபற உணர்கிறோம்.

பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தபோதே விடுதலை ஆர்வமும் வீர உணர்ச்சியும் தங்கள் உள்ளத்தை ஆட்கொண்டன. பள்ளிக்கூட வாயிலிலிருந்து நேரே அரசியல் போர்க்களத்தில் குதித்தீர்கள்-அஞ்சாத நெஞ்சுடன் பணியாற்றினீர்கள்—பற்பல முறை சிறைக் கோட்டத்திற்கும் சென்று அதனைத் தவக் கோட்டமாக மாற்றினீர்கள். நாடுநகரெங்கும் பட்டி தொட்டியெங்கும் சிங்க ஏறுபோலச் சுழன்று சுழன்று அலைந்து, விடுதலை உணர்ச்சியைத் தட்டி எழுப்பி வீரமுழக்கமிட்டீர்கள்.

## தனக்கென வாழாத பிறர்க்குரியாளரே !

ஆங்கில மோகம் தமிழ் மக்களுடைய உள்ளங்களையெல்லாம் பிடர் பிடித்துக் குலுக்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே தாங்கள் பொது மேடைகளில் செந்தமிழால் முழக்கமிட்டீர்கள். **தமிழ்நாடு** என்னும் தின இதழையும், அதே பெயரில் ஒரு வார வெளியீட்டையும் ஈடு இணையற்ற முறையில் வெளியிட்டு, தமிழுக்கும் தமிழர்தம் நாட்டுக்கும், தமிழர் சமுதாயத்திற்கும் அரியதோர் பணியாற்றினீர்கள். தொழிலாளர் உலகத்திலேயும் நுழைந்து, அவர்கள்தம் வாழ்க்கை வளமும் சிறப்பும் அடைய வேண்டுமென்பதற்காக நற்றொண்டு புரிந்திருக்கிறீர்கள். பெண்கள் உரிமை—சீர்திருத்த உலகம்-மூடப் பழக்க வழக்கங்களை முறித்துக் கட்டும் பணி—தாழ்த்தப்பட்ட மக்களைக் கை தூக்கிவிடும் தொண்டு—எந்தத் துறையையும் தாங்கள் மிச்சமாக விட்டு வைக்கவில்லை.

## அறிவும் திறமும் ஒருங்கே அமைந்த அறநெறிச் செம்மலே !

இந்த நாட்டின் ஆரம்பக் கல்வி சிறந்து ஓங்கிச் செழிப்புடன் வளரவேண்டுமென்பதில் தங்களுக்குள்ள ஆர்வம் நாடறிந்ததொன்று. ஆரம்பக் கல்வியை அள்ளி வழங்கும் அரும்பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களிட/

மும், மானேஜர்களிடமும் தங்களுக்குள்ள ஈடுபாடு எவருக்கும் பெருமை தரத்தக்கது. எங்களுக்குப் பற் பல திசைகளிலிருந்து இடையூறும் துன்பமும் அலை அலையாக எழுந்த வேளைகளிலெல்லாம் தாங்கள் எங்க ளுக்கு உற்ற துணையாக இருந்து, எங்களுடைய துயரங் களைத் துடைப்பதில் பெரும் பங்கு கொண்ட பெற் றியை நாங்கள் என்றென்றும் மறக்க இயலாது.

சென்ற நாற்பதாண்டுக் காலமாகத் தமிழ் நாட்டுப் பொது வாழ்வில் ஈடுபட்டுப் பல்வேறு துறைகளிலும் பணியாற்றி, முற்போக்குப் பாதையில் தமிழகத்தை மடமட வென்று அழைத்துச் செல்லும் தாங்கள், பன் னெடுங்காலம் வாழ்ந்து மேலும் மேலும் தமிழ் நாட் டிற்கு நல்வழி காட்டவேண்டுமென்று மனமார வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்,

**சென்னை மாநில உதவி பெறும்**
**மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்கள்**
**சங்கத்தினர்.**

*சென்னை,*
*27–11–55.*

# சென்னை மாநில எயிடட் ஆரம்பப் பள்ளி.
# மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்கள் சங்கம்

94–95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை—1.

(டைரக்டர் புதிய உத்தரவு)

## சம்பள நஷ்ட ஈடு

# பொதுக் காரியதரிசி அறிக்கை

19–11–55 அன்று வேலூரில் நடந்த 2–வது மாநில மாநாட்டின் தீர்மானங்களின்படி, மாநில சங்கத்தின் தலைவர், காரியதரிசி, மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு அங்கத்தினர்கள் கலந்த தூதுக் குழுவினர், நவம்பர் 21, 22–ல் சென்னையில் கனம் முதல் மந்திரி காமராஜர் அவர்களையும், கல்வியிலாகா காரியதரிசி அவர்களையும் பேட்டி கண்டனர். அந்தப் பேட்டியில் நஷ்ட ஈடு கொடுக்கப்படாமையால் எயிடட் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும், மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களும், விளக்கப்பட்டன. உடனடியாக அரசாங்கத்தார் எயிடட் பள்ளிகளுக்கு நஷ்ட ஈட்டைக் கொடுக்க, 6 மாத காலமாகியும் இன்னும் தயங்குவார்களானால், எய்டட் பாடசாலைகளை மூடிவிடவேண்டிய நெருக்கடி ஏற்படுமென்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

இந்தப் பேட்டியின் விளைவாக அரசாங்கத்தார் உடனடியாக கல்வியிலாகா டைரக்டரை, எயிடட் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க, உடனே நஷ்டஈடு கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அந்த உத்தரவின் விளைவாக 23–ந்தேதி கல்வியிலாகா டைரக்டர் R. C. No. 1463 B 7–53 (23–11–55) உத்தரவை எல்லாக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பி, உடனடியாக நஷ்ட ஈட்டைக் கொடுக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார். அதன் சாராம்சம் பின் வருமாறு :—

1951–52 வருடங்களுக்கு முன்புள்ள எல்லா எயிடட் பாடசாலைகளுக்கும் அவரவர்கள் என்ன சம்பளம் விகிதம் வாங்கிக் கொண்டிருந்தார்களோ (Full fee Compensation) அதன்படி அப்பாடசாலைகளுக்கு 13–9–55 தேதிவரை முழு சம்பள நஷ்ட ஈடு கொடுக்கப்படவேண்டுமென்றும், 14–9–55–லிருந்து G. O. No

1546 dated 14–9–55–ல் கண்டுள்ள சம்பள நஷ்டஈடு புதிய விகிதத்தின்படி கொடுத்துவரவேண்டுமென்றும்,

1951–52–க்குப் பிறகு ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பாடசாலைகளுக்கும், 51–52–க்குப் பிறகு புதியதாக சம்பளம் விதித்த பாடசாலைகளுக்கும் G. O. No. 1546 (14–9–55) அரசாங்க உத்தரவின்படி புதிய சம்பள விகிதம் நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டுமென்றும் டைரக்டர் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்.

குறிப்பு : இந்த உத்தரவு தற்காலிகமானது. இந்த உத்தரவின் நகல் (Copy) எல்லா எயிடட் பாடசாலைகளுக்கும் இதுவரையில் கிடைத்திருக்குமென நம்புகின்றோம். சில பாடசாலை மானேஜர்கள் இந்த டைரக்டர் உத்தரவின்படி பணம் பெற்றுக்கொள்வதா அல்லது மறுப்பதா? இனி டைரக்டர் புதிய உத்தரவுபடிதான் எயிடட் பள்ளிகளில் நஷ்டஈடு அளிக்கப்படுமா, என்பன போன்ற பல கேள்விகளை மாகாண சங்கத்திற்கு அனுப்பியிருக்கின்றனர்.

எல்லா மானேஜர்களையும் ஜூன் முதல் 13–9–55 வரை முழு சம்பள நஷ்ட ஈட்டையும் 14–9–55–லிருந்து அரசாங்கம் விதித்துள்ள புதிய விகிதத்தின்படி சம்பள நஷ்ட ஈட்டையும் வாங்கிக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறோம்- அரசாங்க வட்டாரத்தில் விசாரித்ததில், தற்போது டைரக்டர் விடுத்துள்ள அறிக்கை தற்காலிகமானதென்றும், எயிடட் பள்ளிகளுக்கு முழு நஷ்டஈடு கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறதென்றும், அரசாங்கம் ஆலோசித்து முடிவிற்கு வர சில மாதங்கள் ஆகுமென்றும், தெரியவருகிறது.

மாகாண சங்கத்தின் நிர்வாகிகளும், நண்பர் டாக்டர். P. வரதராஜுலு நாயுடு M. L. A. அவர்களின் ஆணை கொண்டு, செகண்டரி பள்ளிகளுக்கு முழு நஷ்ட ஈடு கொடுப்பது போலவே, ஆரம்ப பள்ளிகளுக்கும் முழு நஷ்டஈடு கொடுக்க அரசாங்கத்தார் ஆவன செய்யவேண்டுமென்று முயற்சித்து வருகின்றனர். கூடிய சீக்கிரத்தில் வெற்றிகரமாக எல்லா எயிடட் பள்ளிகளுக்கும், 1955–56–லிருந்து முழு நஷ்ட ஈடு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

P. வீரராகவன், — தலைவர்.

A. R. சேஷாசல — பொதுக் காரியதரி

# நல்லதைக் கெடுப்பதேன்?

## மித்திரனின் முழக்கம்

நமது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கியும், அழகப்பா கமிட்டியின் சிபார்சுகளைக் கண்டித்தும் சென்னைத் தினசரி "சுதேசமித்திரன்" 21-11-55 அன்று அருமையானதோர் தலையங்கம் தீட்டியிருக்கிறது. நமது கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானவை என்பதை இந்தத் தலையங்கம் தெளிவாக விளக்கியிருக்கிறது. ஆசிரியத் தோழர்களும், சென்னை அரசாங்கமும், அழகப்பா கமிட்டியினரும் கூர்ந்து படித்தறிய வேண்டிய கட்டுரை இது :

*பொதுவாக தனியார் நிர்வாகத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகள் திறம்பட நடப்பது பட்டவர்த்தனம். எனினும் அவற்றை ஒழித்துக் கட்டிவிடவேண்டுமென்பது அழகப்பா கமிட்டியின் சிபார்சு. எய்டட் ஆரம்பப்பள்ளி மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு இச் சிபார்சை ஆத்திரத்துடன் கண்டித்திருப்பதில் ஆச்சரியமில்லை தனியாரது பள்ளிக்கூடங்கள் சிலவற்றில் உள்ள ஊழல்களை நாம் அறிவோம். அவற்றில் குறிப்பாக ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கும் விஷயத்தில் புரட்டு நடப்பது பகிரங்க ரகசியம். ஒரு தொகையைக் கொடுத்து அதற்கதிகமான தொகைக்கு ஆசிரியர்களிடமிருந்து கையெழுத்து வாங்கப்படுவது அத்தகைய பள்ளிக்கூடங்களில் சர்வசாதாரணமாகிவிட்டது. ஆனால், இதற்காக தனியார் நிர்வாகத்திலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களையும் கண்டிப்பதில் அர்த்தமில்லை. மேலும் தலைவலிக்கு மருந்து தலையையே எடுத்து விடுவதுதான்என்ற ரீதியில் அமைந்திருக்கிறது அழகப்பா கமிட்டியின் சிபார்சு. மேற்குறித்த ஊழலை நீக்க வழிவகை செய்வது அசாத்தியமன்று. பெரும்பாலான தனியார் பள்ளிக்கூடங்கள் ஒழுங்காகவே நடந்து வருகின்றன. அவற்றில் போதனைதரம் உயர்தரமானது. அருகே ஜில்லா போர்டு அல்லது முனிசிபாலிடி நடத்தும் இலவசப் பள்ளிக்கூடங்கள் இருந்தும், அதிகக் கட்டணம் வாங்கும் தனியார் பள்ளிக்கூடங்களுக்கே பெற்றோர் பலர் தம் குழந்தைகளை அனுப்புகின்றனர். காரணம் தெளிவு. மற்ற பெற்றோர்களும் சிறிது பொருளாதார வசதி பெற்றவர்களாயிருப்பாரானால், மேற்குறித்த இலவசப் பள்ளிக்கூடங்கள் அநேகமாகக் காலியாகவே கிடக்க நேரும். எனினும் இத்தகைய பள்ளிக்*

கூடங்களின் நிலைக்கே எல்லாப் பள்ளிக்கூடங்களையும் கொண்டு வர அழகப்பா கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

போதனைத் தரம் குன்றிவிடும் என்பதற்காக மட்டும் நாம் மேற்குறித்த சிபார்சை எதிர்க்கவில்லை. கல்வியை எல்லா வகையானும் எல்லா மக்களிடையும் பரப்ப வேண்டிய பொறுப்பு அரசியல் சட்டத்தின்படி நம் அரசாங்கத்தின் மீது சுமந்திருக்கிறது. தற்போது பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தைகளில் பாதிதான் படிக்கின்றன. மறு பாதிக்குக் கல்வி வசதி அளிப்பதெனில் பல்லாயிரக் கணக்கான பள்ளிகளை நிறுவியாக வேண்டும். இந்தப் பணியை சர்க்கார் மட்டும் செய்வதைவிட தனியாரது ஒத்துழைப்பைப் பெற்றால் அவ்வளவுக் கவ்வளவு துரிதமாக இதை நிறைவேற்றி வைக்க முடியும் என்பது தெளிவு. எனவே தனியார் இத்துறையில் இன்னும் ஊக்கத்துடன் ஈடுபடுவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதே பொருத்தமாகும். கல்வி வசதி உள்ள இடங்களில் கூட பல குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாதிருக்கக் காரணம் வறுமையே. பள்ளிகளில் பகல் உணவுக்கு ஏற்பாடு செய்தால் அக்குழந்தைகளும் படிக்க வரக்கூடும் என்பதை அழகப்பா கமிட்டி உணர்ந்திருக்கிறது. ஆனால், இதற்காகும் செலவில் ஸ்தல மக்கள் பாதியை ஏற்க முன்வரும் இடங்களில் மட்டுமே அவ்வாறு உணவு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது அக்கமிட்டியின் சிபார்சு. இந்நிபந்தனை பல இடங்களில் பூர்த்தியாகாதிருக்கலாம். இதற்காக அங்கு வறுமையுற்ற குழந்தைகளுக்கு படிப்பு வசதி கிடைக்காமல் செய்வது குரூரம். இதற்குப் பதிலாக சர்க்காரே மேற்குறித்த உணவுச் செலவு முழுவதையும் ஏற்பதுதான் பொருத்தம் என்பதை தென்னிந்திய ஆசிரியர்கள் சங்க நிர்வாக போர்டும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

எய்டட் ஆரம்பப் பள்ளி மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் மகாநாட்டில் வெளியான மற்றொரு குறை இத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு சர்க்காரிடமிருந்து சேர வேண்டிய நஷ்டஈட்டைப் பற்றியது. சர்க்கார் உத்தரவுப்படி எட்டாவது வகுப்பு வரை, மாதம் நூறு ரூபாய்க்குக் குறைந்த வருவாயுள்ளவர்களின் குழந்தைகள், கஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களின் குழந்தைகள், ஹரிஜனக் குழந்தைகள் முதலியவர்களுக்கு முழுச் சம்பள சலுகை உண்டு. இந்த சம்பளத்துக்கு சமமான ஒரு தொகையை பள்ளிக்கூடங்களுக்கு நஷ்டஈடாகக் கொடுக்க சர்க்கார் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றனர். ஆனால், காலா காலத்தில் இத்தொகையை அவர்கள் கொடுப்பதில்லை. இது காரணமாக பல பள்ளிக்கூடங்கள் அத்தியந்

(64-ம் பக்கம் பார்க்க)

# சென்னை மாநில எயிடட் ஆரம்பப்பள்ளி, மானேஜர்கள், ஆசிரிய-மானேஜர்கள் முதல் மாநாடு, சென்னை 27-3-1955.

## மாநாட்டின் வரவு செலவு கணக்கு விவரங்கள்

### வரவு விவரங்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சென்னை பாடசாலை மானேஜர்கள் நன்கொடை வரவு | 799 | 0 | 0 |
| செங்கற்பட்டு மாவட்ட பிரதிநிதிகள் | 10 | 0 | 0 |
| வட ஆற்காடு மாவட்ட ,, | 40 | 0 | 0 |
| தஞ்சாவூர் மாவட்ட ,, | 32 | 0 | 0 |
| திருச்சி மாவட்ட ,, | 15 | 0 | 0 |
| மதுரை மாவட்ட ,, | 14 | 0 | 0 |
| இராமநாதபுரம் மாவட்ட ,, | 15 | 0 | 0 |
| தென் ஆற்காடு மாவட்ட ,, | 29 | 0 | 0 |
| ஆகமொத்தம் | 954 | 0 | 0 |

### செலவு விவரங்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மெமோரியல் ஹால் வாடகை | 80 | 0 | 0 |
| ஹால் சிங்காரிக்க | 20 | 0 | 0 |
| திரு. இராமாநுஜம் பிள்ளை அவர்களுக்கு வெள்ளிக் கோப்பை | 173 | 0 | 0 |
| பிரதிநிதிகள் சாப்பாட்டு செலவு | 160 | 0 | 0 |
| மாலைகள் | 17 | 0 | 0 |
| பேட்ஜ்கள் தயாரிக்க | 18 | 10 | 3 |
| பேட்ஜ் துணி | 20 | 0 | 0 |
| பேட்ஜ் ரிப்பன் | 3 | 4 | 0 |
| பேட்ஜ் ஊசி | 8 | 9 | 0 |

| | | | |
|---|---|---|---|
| சாரணர்கள் (Scouts) | 13 | 4 | 0 |
| ஒலி பெருக்கி (Loud speaker) | 20 | 0 | 0 |
| பிளாக் & டிராயிங் (Blocks & Drawing) | 16 | 0 | 0 |
| விளம்பரங்கள் :—சுதேசமித்திரன் | 40 | 0 | 0 |
| தினத்தந்தி | 20 | 0 | 0 |
| நம்நாடு | 24 | 0 | 0 |
| பத்திரிகை நிருபர்கள் செலவு | 5 | 0 | 0 |
| அச்சுக்கூலி—மாநாட்டு வரவேற்புரை தலைமையுரை ஆங்கிலத்திலும் தமிழிலும் | 240 | 0 | 0 |
| கவர்–ஸ்டாம்பு வகை | 6 | 8 | 0 |
| போட்டோ எடுப்பவர் (All India Photo Agency) | 67 | 8 | 0 |
| கையிருப்பு | 6 | 4 | 9 |
| ஆகமொத்தம் | 954 | 0 | 0 |

P. வீரராகவன்
தலைவர்
30–11–55

A. R. சேஷாசலம்
காரியதரிசி

(62–ம் பக்கத் தொடர்ச்சி)

வசியச் செலவுகளுக்குக் கூடப் பணமின்றித் திணறுகின்றனர். அவற்றைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குகாலாகாலத்தில் சம்பளம் கொடுக்கப்படுவதில்லையென்றும் புகார்கள் அதிகரித்து வருகின்றன. இது பற்றி தென்னிந்திய ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் கல்வி மந்திரியை நேரில் கண்டு முறையிட்டதன் பேரில் அவர் இக்குறையைப் பரிகரிக்க உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்வதாக உறுதி கூறியுள்ளார். இதில் இனியும் காமதத்திற்கு இடமில்லாததுடன், நஷ்டஈட்டின் அளவு நியாயமான அடிப்படையில் நிர்ணயிக்கப்படுமென்றும் நம்புகிறோம்.

'சுதேசமித்திரன்'

Edited, Printed and Published by P. Veeraraghavan
at the 'Venkatesan Press'
94/95 New St., Mannady, Madras.—1.

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 9 | 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 10 | 0 | 25 | 19–5–'54 |

**மாதிரிப் பிரதிக்கு ரூ. 1—2—0 அனுப்பவும்.**

## கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** | | | | | |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 28 | 19–5–'54 |
| **பாலர் கதா போதினி** | | | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 59 | 19–5–'54 |

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–5–0 அனுப்பவும்.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc. L. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 18 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் ரூ 0–10–0 அனுப்பவும்.

## புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 8 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

Regd No. M. 5018.

## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., B.T.

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கிகாரமான தேதி |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 8 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 14 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–15–0 அனுப்பவும்.

## நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணமூர்த்தி, B. A., B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 10 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–11–0 அனுப்பவும்.

## தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A..L.T.

| | | | |
|---|---|---|---|
| 4, 5–வது வகுப்புகளுக்கு | 0 5 0 | 8 | 4–5–'55 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–2–0 அனுப்பவும்.

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 13 | 19–5–'54 |

V. K. சேஷாத்திரி, B. A., B. T.

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 7 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 12 | 19–5–'55 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 12 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–1–0 அனுப்பவும்.

Mother India English Reader Primer I 0–5–0

மாதிரிப் பிரதிகளுக்கு ரூ. 0–2–0 அனுப்பவும்.

Printed at the Venkatesan Press, Madras—1.